
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

நுகர்வோரின் நம்பிக்கையை வென்ற அரிமரக் கைத்தொழிலின் உண்மையான தலைமைத்துவம்



2021 ஆண்டறிக்கை

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை 2021

அரிமரச் சந்தைக்கான உண்மையான தலைமைத்துவம்

1968-2021

52 வருட முடிவுறாத பயணத்தைத் தொடரும்
அரச மரக் கூட்டுத்தாபனம்

இதயத்தை வெல்லும் அமைப்பாக நமது எதிர்காலம்.

நோக்கு

தேசத்தின் நம்பிக்கையை வென்ற தரம்மிக்க அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை வழங்குபவராகவும் மரப் பலகைச் சந்தையில் தலைவராகத் திகழ்தல்

செயற்பணி

எம்மிடமுள்ள தொழில்நுட்ப அறிவு நன்மதிப்பு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சட்ட ரீதியான சுற்றாடலுக்கு சாதகமான வகையில் தேசிய தேவைப்பாட்டின் பிரகாரம் எமது வாடிக்கையாளர்களின் அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்விக்கு உற்பத்தி செய்து வழங்கல்

எம்மைப் பற்றி

அரச மரக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஓர் வணிக நிறுவனமாகும். அது 1968.04.04 ஆந் திகதிய 1979/6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் காணி, நீர்ப்பாசனம் மற்றும் மின்சார கௌரவ அமைச்சரினால் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதுடன், 1969 நவம்பர் 7 ஆந் திகதிய 14879 ஆம் இலக்க வர்த்தமானி, 1982 பெப்ரவரி 05 ஆம் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2001 ஆம் ஆண்டின் ஜூன் 26 ஆம் திகதிய 1190/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2008 பெப்ரவரி 25 ஆம் திகதிய 1538/7 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் மேலும் நாளதுவரையாக்கப்பட்டது. ஈடுபடுத்தப்பட்ட ஆரம்ப மூலதனம் ரூபா 2.5 மில்லியனாகும்.

அரச மரக் கூட்டுத்தாபனம் மிக உயர்ந்த தரம் வாய்ந்த உயர்தர மரத்தினாலான தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கும் அதிகபட்ச சேவையை வழங்குவதற்கும் முடிந்தவரை முயற்சி செய்கின்றன. அழகான வீடுகள், ஆடம்பரமான ஹோட்டல்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு வாசஸ்தலங்கள் என்பவற்றிற்கு எமது விலைமதிப்பற்ற மர உற்பத்திகள் அதிக பெறுமதியைச் சேர்க்கின்றது. நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட பெறுமதியான மரத்தினால் செய்யப்பட்ட சிறப்புகள் அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கான மரத்தினாலான பொருட்கள், மரத் தளபாடங்கள் மற்றும் மரத்துண்டங்கள் மற்றும் கிழிக்கப்பட்ட பலகைகள் உற்பத்தி செய்து வழங்குவதினூடாக வாடிக்கையாளரின் உயர் திருப்தியை எதிர்பார்க்கின்றது. அரச மரக் கூட்டுத்தாபனம் புகழ் பெற்ற ஓர் அரச நிறுவனமாக விளங்குவதுடன் பரவலான உயர்தர மற்றும் நீண்ட கால மரப் பொருட்களை சந்தைக்கு வழங்குவதுடன், தயாரிப்புக்கபள் அதி நவீன தொழிநுட்பத்துடன் அதி நவீன இயந்திரங்களுடன் கூடிய நவீன வேலைச் சூழலில் உற்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன.

53 வருட அனுபவத்துடன் கூடிய நிறுவனமொன்றாக அரச மரக் கூட்டுத்தாபனம் உயர் தரத்திலான தளபாடங்கள் தேவையுள்ள ஹோட்டல் உரிமையாளர்களினதும் அரச நிறுவனங்களினதும் தளபாட வடிவமைப்பாளர்களினதும் முன்னணித் தெரிவாகக் காணப்படுகின்றது. வசதியான இருக்கை முதல் தனித்துவமான படுக்கையறைத் தொகுதி வரை வாடிக்கையாளரால் கோரப்பட்ட விலைக்கும் உரிய காலப்பகுதியிலும் உயர் தரத்துடன் கூடிய தயாரிப்புக்களை உற்பத்தி செய்து வழங்கும் இயலுமை அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றது. எமது உற்பத்திகளின் தரம் எம்மால் உற்பத்திச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

எங்கள் தயாரிப்புகளின் தரத்தை எவ்வாறு உறுதிப்படுத்துகிறோம்?

- எங்கள் தயாரிப்புகளுக்கு நிலைபேறான முறையில் நிர்வகிக்கப்படும் காடுகளிலிருந்து பெறப்பட்ட முதிர்ந்த மரங்கள் பயன்படுத்தப்படும்.
- இளைய மற்றும் குறைபாடு இல்லாத உயர் தர மரங்களைப் பயன்படுத்துதல்.
- நன்கு பயன்படுத்தப்பட்ட மரத்தின் பயன்பாடு
- நவீன உற்பத்திச் செயன்முறைகளுக்கு மரங்களின் பயன்பாடு
- தரம் மற்றும் பிற சான்றழிக்கப்பட்ட மரம் அல்லாத மூலப் பொருட்களின் பயன்பாடு
- நவீன பொருத்துதல் மற்றும் முடிக்கும் நுட்பங்களைப் பயன்படுத்தல்

உற்பத்திகளின் தரம் தவிர கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து வகையான தளபாடத் தேவைகளுக்காக இலவச மதிப்பீட்டுச் சேவைகள் மற்றும் அளவிடல் சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், எங்கள் சொந்த விவரக் குறிப்புகளுக்கு அமைய அதிக வருமானத்துடன் தயாரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட உயர்தர தளபாடங்களுடன் சந்தைக்கு வழங்க நாங்கள் உத்தரவாதம் அளிக்கின்றோம். எங்கள் தயாரிப்பு முறைகளை விரிவாக்கவும், தொடர்ந்து தரமான சேவையை வழங்கவும் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சூழலை மேம்படுத்தவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தன்மை



சொத்துக்கள்
9208
ரூ. மில்லியன்



ஊழியர்கள்
1606



விற்பனை வருமானம்
5696
ரூ. மில்லியன்



பொறுப்புக்கள்
2451
ரூ. மில்லியன்

எமது பணிகள்



நிதி அடிப்படையில் உறுதியானது



வீடுகள் மற்றும் சேவை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக நிலைபேறான மூலப்பொருட்கள் வழங்கப்படும்



நிலைபேறான வன முகாமைத்துவ தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டு சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் அதிகரிப்பதற்குப் பங்களிக்கிறது



வருமான வரி மற்றும் திறைசேறிக்கு வரி செலுத்தி சமூக அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்தல்



விரிவான விலகல் பரவும் நவீன மற்றும் சம்பிரதாய தளபாடங்கள் வழங்கப்படுகின்றன



රාජ්‍ය දැව සංස්ථාව
STATE TIMBER CORPORATION




பொருளடக்கம்

நிதிசார் முக்கிய பதிவுகள்	8
நிறுவனத் தகவல்கள்	9
முகாமைத்துவக் குழு	10
தலைவரின் மீளாய்வு	13
பொது முகாமையாளரின் மீளாய்வு	15
எமது பொறுப்புக்கள் மற்றும் எமது வர்த்தகப் பெறுமானங்கள்	18-19
பணிப்பாளர் சபை	20
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு	21
பணிப்பாளர் சபை மீளாய்வு	22
எமது மேவுகை வலயங்கள்	27
நிறுவன நிர்வாகம்	28
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை	30
இடர் முகாமைத்துவம்	32
நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு	37
வியாபாரப் பொழிப்பு	45
தசாப்தத்தின் தகவல்கள்	48
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	49
வருடாந்தக் கணக்குகள்	58
நிதிக் கலைச் சொற்கள்	80


நிதிசார் முக்கிய பதிவுகள்

டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது		2021	2020	வித்தியாசம் %
வருமானம் ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் விதங்கள்				
வருவாய்	ரூபா. '000	5,695,663	3,981,688	43%
திறைசேறி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம்	ரூபா. '000	1,496,156	569,521	163%
திறைசேறிக்கு செலுத்திய வரி	ரூபா. '000	100,000	511,026	-80%
வருமான வரி	ரூபா. '000	259,944	105,615	146%
வருடத்துக்கான தேறிய இலாபம்	ரூபா. '000	1,236,212	463,907	166%
உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள்	%	18.0	8.0	125%
சொத்துக்கள் மீதான ஈட்டல்கள்	%	13.0	6.0	117%
ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்				
மொத்த சொத்துக்கள்	ரூபா. '000	9,207,819	7,286,194	26%
மொத்த உரிமைப்பங்கு	ரூபா. '000	6,757,207	5,464,633	24%
மொத்த படுகடன்கள்	ரூபா. '000	2,450,612	1,821,561	35%
கடன்/ உரிமைப் பங்குகள்	%	36.3	33.3	9%
கடன்/மொத்த சொத்துக்கள்	%	26.6	25.0	6%
ஏனைய தகவல்கள்				
மொத்த ஊழியர்கள்	எண்ணிக்கை	1,606	1,708	-6%
ஊழியர் ஒருவரின் வருவாய்	ரூபா. '000	3,546	2,331	52%
ஊழியர் ஒருவருக்கான வருமானம் (திறைசேறி மற்றும் வரிக்கு முன்)	ரூபா. '000	932	333	179%


மீண்டெழும் செலவினம் **ரூபா (மி)**



திறைசேறி மற்றும் வருமான வரிக்கு முன்னர் **ரூபா (மி)**



மொத்த சொத்துக்கள **ரூபா (மி)**



நிறுவனத் தகவல்கள் - 2021

கௌரவ ஆர். எம். சீ. பீ. ரத்நாயக்க அவர்கள்	- வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
திரு.சோமரத்ன விதானபதிரண அவர்கள்	- செயலாளர், வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

பணிப்பாளர் சபை -2021

திரு. உதய. சீ. வலிசிங்ஹ	- தலைவர் - அரச மரக் கூட்டுத்தாபனம்
திருமதி. பீ. என் கமகே	- பணிப்பாளர் (திறைசேறி பிரதிநிதி)
திரு. கே. எம். ஏ. பண்டார	- பணிப்பாளர் (வன பாதுகாப்பாளர் நாயகம்)
திரு. பீ. ஏ. தர்மரத்ன	- பணிப்பாளர்
திரு. பீ. டீ. குணதிலக்க	- பணிப்பாளர்
திரு. எச்.கே. எம்.ஜே. எச். குமாரசிங்ஹ	- பணிப்பாளர்
திரு. ஜீ. கபில பிரசன்ன	- பணிப்பாளர்
திருமதி. எம். ஜீ. திலானி சாரிகா	- பணிப்பாளர் சபை செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திருமதி. பீ. என் கமகே	- சபைத் தலைவர்
திரு. எச்.கே. எம்.ஜே. எச். குமாரசிங்ஹ	- சபை உறுப்பினர்
திரு. ஜீ.கே. பிரசன்ன	- சபை உறுப்பினர்

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்
306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை

பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

நிதியாண்டு

ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

தொலைபேசி : 94112866600-5
தொலைநகல் : 94112866623
இணையத்தளம் : www.timco.lk

முகாமைத்துவக் குழு - 2021

பொது முகாமையாளர்	கலாநிதி என் டீ. ருவன்பதிரண	PhD (Forestry), M.Sc. (Forestry), B.Sc.

பிரதி பொதுமுகாமையாளர்கள் மற்றும் உதவிப் பொதுமுகாமையாளர்கள்

பி.பொ. மு (நிதி)	திரு ஜீ. டீ. எஸ். குமாரசிங்ஹ	MBA, B.Sc. (Fin. Mgr), ACA, ACMA
பி.பொ. மு (மனித வள மற்றும் நிர்வாகம்) பி.பொ	திரு. எம். ஏ. சீ. என். சமரசிங்ஹ	MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin.
பி.பொ. மு (செயற்பாடு)	திரு. எம் சீ. தேவேந்திர	M.Sc. (Forestry), B.Sc.
பி.பொ. மு (சந்தைப்படுத்தல்)	திரு. டப்ளியூ. பீ. சமந்த	M.Sc. (Forestry), B.Sc. N. Dip. Teaching
பி.பொ. மு (பொறியியல் மற்றும் உற்பத்தி) (பதில்)	திரு. ஜீ. ஜீ. திஸர கமகே	B.Sc.
உ.பொ. மு (வலய)	திரு. பீ.கே. அஜித் சந்தன	B.Sc.
உ.பொ. மு (வலய)	திரு. எச் பீ. ரஜவத்த	BA
உ.பொ. மு	திரு. சீ.கே. முத்துமால	PhD. (Agri. Engineering) M.Sc. (Forestry), B.Sc.
(ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி)		(Agri.) Hon.

முகாமையாளர்கள்

முகாமையாளர் (சிலிப்பர்கள், மின்கம்பங்கள்)	திரு. டீ. எம். என். புஷ்பகுமார	B.Sc.
முகாமையாளர் (இயந்திரப் பொறியியல்)	திரு. ஏ.கே. லசித்த எட்மன்ட்	B.Sc. (Engineering)
முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)	திரு. எச். எம். எஸ். மாதவ	B.Com (Sp)
முகாமையாளர் (பாதுகாப்பு)	திரு. சமிந்த வீரமன்	
முகாமையாளர் (நிதி)	திருமதி. பீ. டீ. என். போவத்த	
முகாமையாளர் (நிதி)	திரு. எச். ஜீ. ஆர். விஜேநாயக்க	
முகாமையாளர் (சட்டம்) (பதில்)	திருமதி.கே. ஐ. டீ. பீ. காரியவசம்	LLB, Attorney at Law
முகாமையாளர் (நிதி) (பதில்)	திரு. யூ. எஸ். மடவல	HNDA, MAAT
முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம்) (பதில்)	திரு.ஜே. எம். எம். பீ. ஜயசுந்தர	B.Sc. (Sp) Hon.

பிராந்திய முகாமையாளர்கள்

பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்)	திரு. ஆர். விஜேதுங்க	B.Sc. (Agri.)Sp
பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்)	திரு. எம். டீ. ஸீ. சம்பத்	BA
பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்)	திரு. யூ. பீ. எச். உலுவடுகே	B.Sc
பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்)	திரு. டீ. எச். ராஜபக்ஷ	M.Sc. (Forestry), B.Sc.
பி. முகாமையாளர் (கொழும்பு) (பதில்)	திரு. எச். ஏ. காமினி அல்விஸ்	
பி. முகாமையாளர் (மொனராகலை) (பதில்)	திரு. எஸ். ஸீ. ஜயமான்ன	B.Sc.
பி. முகாமையாளர் (அனுராதபுரம்) (பதில்)	திரு. டீ. எல். அபேநாயக்க	
பி. முகாமையாளர் (அம்பாறை) (பதில்)	திரு. ஆர். சீ. சமன் குமார	
பி. முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு. எச். எல். நந்தன	B.Sc.
பி. முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு. யாழ்ப்பாணம்	
பி. முகாமையாளர் (குருனாகல்)	திரு. எச்.பீ. எஸ். திஸாநாயக்க	BA
பி. முகாமையாளர் (மாத்தறை)	திரு. டப்ளியூ. ஐ. எஸ்.அரங்க	B.Sc. (Hon.)
பி. முகாமையாளர் (மின்னேரியா) (பதில்)	திரு. எம். டப்ளியூ. டப்ளியூ. பீ. முதன்நாயக்க	
பி. முகாமையாளர் (கண்டி) (பதில்)	திரு. டீ. ஏ.ஹெந்தவிதாரண	
பி. முகாமையாளர் (நுவரெலியா) (பதில்)	திரு. டப்ளியூ. டீ. பீ. ஜீ. ஜயசேக்கர	
பி. முகாமையாளர் (பண்டாரவல) (பதில்)	திரு. சுனில் ஜயரத்ன	

துணை மேலாளர்கள்

பிரதிமுகாமையாளர் (வடிவமைப்பு/தரக் கட்டுப்பாடு)	திரு. ஈ. எம். எம்.பெர்ணான்டோ	
தொகுதிப் பகுப்பாய்வாளர்	திரு. டப்ளியூ. எச். ஏ. சந்திரகுமார	B.Sc.
பிரதி முகாமையாளர் (மனிதவளம்)	திருமதி. எச். பீ. பெரேரா	
பிரதி முகாமையாளர் (மனிதவளம்)	திருமதி .கே. எஸ் அபேநாயக்க	
பிரதி முகாமையாளர் (நிதி)	திரு. எச். எம். பீ. பீ.ஹேரத்	
பிரதி முகாமையாளர் (நிதி) (பூஸ்ஸ)	செல்வி. ஏ. எல் . டப்ளியூ. துஷாரி.டி. சில்வா.	HNDA, MAAT
பிரதி முகாமையாளர் (நுவரெலியா)	திரு. என். டி. எஸ்.கே. பீ. திலகவர்தன	HNDA, MAAT
பிரதி முகாமையாளர் (நிதி)	(கண்டி) – திரு. டப்ளியூ. எம். ஜீ. எம். விஜேசிங்ஹ	B.Sc. (Bus.Admin.) MAAT.
பிரதி முகாமையாளர் (நிதி)	(மொனராகலை) – திரு. ஏ.ஜே. புஷ்பகுமார	B.Sc. (Bus.Admin)
பிரதி முகாமையாளர் (நிதி)	(மின்னேரியா) – திரு . எம். டீ. பீ. எம். திஸாநாயக்க	B.Sc. (Acc)
பிரதி முகாமையாளர் (நிதி)	திருமதி. டீ. என் .விஜேசூரிய	B.Sc. (Acc), CTA.
	திருமதி. எஸ். விதானகே	
பிரதி முகாமையாளர் (நிதி) (கெப்பெடிபொல)	திரு. டி.கே. ஜீ. ஜீ. புஷ்பகுமார	
பிரதி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	திரு. டப்ளியூ. டி. ஏ. எஸ். திலகரத்ன	B.Sc. (Finance)

பிரதி முகாமையாளர் (நிதி) (பண்டாரவல)	திரு. எஸ்ச. எம்.ஹேவகே	B.Sc (Bus.Admin)
பிரதி முகாமையாளர் (நிதி) (குருனாகல்)	திரு. எஸ். எச். ஐ. பிரசாத்	B.Sc (Bus.Admin)
பிரதி முகாமையாளர் (நிதி) (கெப்பெடிபொல)	திரு. டி.கே. ஜீ. ஜீ. புஷ்பகுமார	B. Com.
பிரதி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	திரு. டப்ளியூ. டி. ஏ. எஸ். திலகரத்ன	
பிரதி முகாமையாளர் (அரிமரத் தரப்படுத்தல் மற்றும் ஏல விற்பனை)	திரு. டி. பீ.கே. எஸ். ஜீ. சமரவிக்ரம	B.Sc. (Mkt.Mgt.)
பிரதி முகாமையாளர் (அரிமர வழங்கல்)	திரு. பீ. ஏ. நலின் தேசப்பிரிய	
பிரதி முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு)	திருமதி. எச். எம். டீ. எஸ். அபேரத்ன	B.Desing (Hon.) MBA
பிரதி முகாமையாளர் (அரிமர ஆலை)	திரு. எம். பீ. என். அருன சாந்த	B.Sc. (Bus.Admin.)
பிரதி முகாமையாளர் (விசாரணை)	திரு. எஸ். ஏ. டீ. நிரோஷன்	B.Sc. (Bus.Mgt.)
பிரதி முகாமையாளர் (இயந்திரப் பொறியியலாளர்)	திரு. எம்.கே. எம். அத்ஹார்	B.Tech.
பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)	திரு. எச். எம். எல். ஈ. குணசேகர ஹேரத்	B.Sc.
பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)	டப்ளியூ. எம். ஐ. எச். வீரசூரிய	B.Sc.
பிரதி முகாமையாளர் (உற்பத்தி)	திரு. ஐ. எம். ஐ. எஸ்.கே. விக்கிரமசிங்ஹ	PgD.Fin. & Mathematics, B.Sc.
பிரதி முகாமையாளர் (கொள்வனவு மற்றும் கப்பல் வாணிபம்)	திருமதி. எச். டி. எஸ். சந்தமாலி	B.B.Mgt.(HR) Sp.,

தொகுதி முகாமையாளர்கள்

பிரதி முகாமையாளர் (தளபாடத் தொகுதி) கல்தெமுல்ல	திரு. எச். எம். யூ. பீ. சமரவீர	BLE, Dip. IT & M
பிரதி முகாமையாளர் (தளபாடத் தொகுதி) அம்பாறை	திரு. ஆர். எஸ். பல்லியகே	B.Sc. (Bus.Admin)

பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்

பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மின்னேரியா)	திரு.கே. எம். பீ. டீ. சீ. கபிலரத்ன	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (அம்பாறை)	திரு. யூ.ஜே. ஜீ. ஏக்கநாயக்க	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கண்டி)	திரு. டப்ளியூ. ஏ. எஸ். விஜேசேகர	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்)	திரு. டீ. பீ. ரமேஷ்	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மாத்தறை)	திரு.கே. சந்திரசேன	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கொழும்பு)	திரு. ஈ. எம். ஏ.கே. எதிரிசிங்ஹ	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கொழும்பு)	திரு. எஸ். பீ. உடகெதர டீயு	BA
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மொனராகலை)	திரு. பீ.ஹெட்டிஆரச்சி	B.Sc.
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (குருனாகல்)	திரு. எஸ். ஏ. மனோஜ் துஷார	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (குருனாகல்)	திரு. ஆர். பி. பி. டீ. ஜயசிங்ஹ	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (குருனாகல்)	திரு. எஸ். எம். எஸ். சிரிவர்தன	

தலைவரின் மீளாய்வு



சவால் மிக்க வருடத்தினுள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பாராட்டத்தக்க செயலாற்றுகையொன்றை, முன்வைத்ததாக அறிக்கை வழங்குவதற்கு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆண்டு பூராகவும் எமது விற்பனையை நடாத்திச் செல்வதற்கு பணியாளர்களின் தழுவு திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை அடிப்படையாக இருந்தது.


2021 ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனம் பல சவால்களுக்கு முகம் கொடுத்திருந்தாலும், அதற்காக வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் நிலையான இருப்புக்குமான திறன் இருந்ததோடு, அது தளம்பாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணியாக அமைந்தது எமது பணிக்குழுவின் அனைவரிடத்திலும் காணப்பட்ட நேரான எண்ணக்கருவாகும். இச்சவாலான சந்தர்ப்பத்தில், விசேடமாக எமது நாட்டின் மக்களுக்கு சேவையாற்றுவதற்காக பிரதான பணியொன்றை நிறைவேற்றிய, அவர்களின் ஒத்துழைப்பினை மீண்டுமொரு முறை இனங்கண்டு கொள்ள நான விரும்புகின்றேன். கூட்டுத்தாபனத்தின் நிதியின் நிலையான தன்மையை நடத்திச் செல்வதற்கும் சவால்களின் முன்னிலையில் தளராது இருப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவினைக் குறைப்பதற்கும் வினைத்திறனை உயர்த்தும் செயன்முறைகளுக்கும் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் புதிய செயன்முறைகளை உருவாக்குவதில் அதற்கு இணங்குதல், சவாலான சூழலொன்றினுள் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு அடிப்படை உதவியாக இருந்தது. கழகத்தின் தாக்கம் இருந்த போதும், எமது கூட்டுத்தாபனத்தின் தொலைநோக்கு மற்றும் செயலூக்கமான நடவடிக்கைகளின் பெறுபேறாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதியாண்டிற்காக 163% ஆன இலாப அபிவிருத்தியொன்றைக் கொண்ட 1,496 ரூபா மில்லியன்களான வரிக்கு முன்னரான இலாபத்தை அறிக்கையிடுவதற்கு எமது கூட்டுத்தாபனத்துக்கு முடிந்துள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனத்தினுள் பாதுகாப்பு படிமுறைகளையும் தரங்களுக்காக எப்போதும் பாரியளவு முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டினுள் சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை நடத்திச் சென்று அதிக கொவிட் 19 பாதுகாப்புச் செயன்முறைகளை உள்ளடக்கி எமது பாதுகாப்பு வழிமுறையொன்றையும் தரத்தையும் மேலும் உயர்த்தியது.

2021 ஆண்டில் எமது ஆரம்ப உறுதியையும், புதிய மற்றும் உயர்ந்த நிலையில் உற்பத்திகளை உற்பத்தி செய்வதில் பாரியளவு கவனம் செலுத்தப்பட்ட ஆண்டொன்றாகும். புதிய சாதாரண நிலைமைகளின் கீழ் எமது செயற்பாட்டு நடவடிக்கைகளை பெரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊக்கமுள்ள பணிக்குழுவொன்றுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிடையில் நாம் மீண்டுமொரு முறை எமது சூழல் மற்றும் சமூக கலாச்சார செயலாற்றுகையை உயர் மட்டத்தில் விரிவுபடுத்தினோம்.


மனித வளங்கள் என்பது எமது கூட்டுத்தாபனத்திடமுள்ள அதிக பெறுமதிமிக்க வளம் என்பது எமது நம்பிக்கையாகும். எமது வாடிக்கையாளர்களுக்கு முடிந்தளவு உயர் மட்டத்தில் சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடனுள்ள மற்றும் கூட்டுத்தாபனத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு தமது பணிகளில் இடையூறின்றி நிறைவேற்றுகின்ற எமது பணிக்குழுவின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2021 ஆண்டிலும் எமது முதலீட்டை இட்டோம்.

நிதிச் செயலாற்றுகை

2021 ஆண்டிற்காக 5,696 ரூபா மில்லியன்களான விற்பனை வருமானமொன்றை நெருங்குவதற்கு கூட்டுத்தாபனத்துக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதோடு, முன்னைய ஆண்டில் 3,982 ரூபா மில்லியன்களான விற்பனை வருமானத்தை விட இது 43% உயர்வடைந்ததாகும். வருமான வரிக்கு முன்னரான இலாபம் 1,496 ரூபா மில்லியன்கள் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் 1,135 ரூபா மில்லியன் ஆக அறிக்கையிடுவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடிந்தது. இவ்வெற்றியுடன் அரசிடமுள்ள கூட்டுத்தானமொன்று (நிறுவனமொன்று) ஆக இக்கடினமாக கால எல்லைக்குள் வரி செலுத்தியதன் பின்னர் இலாபத்திலிருந்து 100 ரூபா மில்லியன் திறைசேறி வரியாக வழங்குவதற்கு முடிந்தமை பற்றி நாம் பெருமையடைகின்றோம்.



அது போன்றே, வரி செலுத்துவதற்கு முன்னர் சாதாரண சொத்துக்கள் மீதான இலாபம் (ROA) 2021 ஆண்டில் 15% ஆக அறிக்கையிடப்படுவதோடு, அது 2020 ஆண்டில் பெறுமதி அதாவது 6% க்கு ஒப்பீட்டளவில் உயர்வடைவதாகும். 2020 ஆண்டில் 8% ஆக அறிக்கையிடப்பட்ட வரிக்குப் பின்னரான பொதுவான பகுதிகளின் மீது வருமானமும் (ROE) 2021 வருடத்தில் 18% வரை உயர்வடைந்துள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பகுதிகளின் வருமான உருவாக்கத்துக்காக பாரிய பங்களிப்பொன்றை வழங்கியுள்ளதாகவும் கூட்டுத்தானம் பொருத்தமான ஆலோசனை மூலதன முகாமைத்துவ கொள்கையொன்றை நடத்திச் செல்கின்றது என இதன் மூலம் தெளிவாகின்றது.



எதிர்கால பயணம்

கொவிட் 19 தொற்றுநிலை உலகம் முழுவதும் நிச்சயமற்ற நிலையைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தியுள்ளதனால் கூட்டுத்தாபனம் மரக் கைத்தொழில் மற்றும் மொத்தமாக இலங்கை அபிவிருத்தியை நோக்கி எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்பட முடியுமான தடங்கல்களைப் பொருட்படுத்தாது கைவிடாது முயற்சி மற்றும் விருத்தியை நெருங்குவதற்கு எமக்குள் உள்ள தளம்பலற்ற திறங்களின் அடிப்படையில் நாம் உறுதியாக உள்ளோம். புதிய உறுதியொன்றுடன் நாம் முன்னோக்கிய பயணமொன்றுக்குத் தேவையானவாறு இசைவாக்கமடைந்து எதிர்வரும் வருடங்களுக்காக எம்மால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கினை நெருங்குவோம்.

நாம் சவால்கள் உள்ள புதிய வருடத்துக்குள் பிரவேசிப்பதனால் கூட்டுத்தாபனத்தின் மூலம் எப்போதும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதோடு, அப்பகுப்பாய்வுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் முன்னர் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்கிறோம். எனினும் கடந்த ஆண்டுகளில் வெற்றியைக் கொண்டு வரும் செயன்முறைகளில் முக்கியமாக உறுதிப்படுத்தப்பட்டது "கூட்டுத்தாபனத்தின் உறுதியான அடித்தளம், உறுதியான வழிமுறைகளைப் போன்றே வியாபார முன்மாதிரிகளில் தாங்கிக் கொள்ளும் திறன் மற்றும் சுறுசுறுப்புத் தன்மை" எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடியுமாக உள்ளது எனவும் நாம் நம்புகின்றோம்.

எமது அடிப்படை வியாபாரத்தை கட்டியெழுப்புவதற்கும் விருத்தி செய்வதற்குமுள்ள சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு திறன் மற்றும் முன் ஆயத்தம் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும். அதற்கிடையில் எமது அபிவிருத்திப் பயணத்துக்கு வழிகாட்டும் எமது வர்த்தகப் பெயரை மேலும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளையும் எமது வெற்றிக்கு உதவியாக உள்ள ,ருப்புப் பத்திரங்களை வெளிப்புற காரணிகளையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். "எமது வாடிக்கையாளர்களுக்கு எம்மால் நிர்மாணிக்கப்படுகின்ற பெறுமதிகளை மேலும் உயர்த்தும் எதிர்பார்ப்பு",னால் எம்மை முன்னே செயற்படுத்துகின்றதென நான் கவனம் செலுத்துகின்றேன். அவ்வெதிர்பார்ப்புக்கு அடுத்ததாக சமூக மற்றும் சூழல் ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய அமைப்பொன்றாக எமது தனித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு செயற்படுவதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு நிலையான பெறுமதியை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக அரச மரக் கூட்டுத்தாபனம் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகின்றது.

நன்றி நவிலல்

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் அவர்களுக்கும், இராஜங்க அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் உட்பட பணிக்குழுவுக்கும், வன பாதுகாப்பாளர் நாயகம் உட்பட அத்திணைக்களத்துக்கு இணைக்கப்பட்ட அனைத்து பணிக்குழுவினருக்கும், ஏனைய சகல அரச ஊழியர்களுக்கும் எமக்குவழங்கிய ஒத்துழைப்பு சார்பாக மனமார்ந்த நன்றிகளை வழங்குவதற்கு இதனை சந்தர்ப்பமொன்றாக்கிக் கொள்கின்றேன்.

நான் தலைவராகச் செயலாற்றிய இக்காலப் பகுதிக்குள் **2021 ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட விற்பனைப் புரள்வு போன்றே இலாபம் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 53 வருட கால வரலாற்றில் பதியப்பட்ட உயர்ந்த விற்பனைப் புரள்வு மற்றும் இலாபம் ஆகும்.** இதற்காக எனக்கு ஒத்துழைக்க முடிந்ததையிட்டு நான் நேர்மையாகப் பெருமிதமடைகின்றேன். அவ்வாறே, இவ்வெற்றியின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக உதவியை வழங்கிய அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் உட்பட உயர் அதிகாரிகள் குழுவிற்குப் போன்றே, அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

2022 ஆண்டு இலகுவான ஆண்டொன்றாக இருக்கும் என நாம் எதிர்பார்ப்பதில்லை. குறுகிய கால சவால்மிக்க நிற்காத, நீண்ட கால கவனத்தைச் செலுத்துவோம். எமது இலக்கினை நெருங்கிக் கொண்டு எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த நலன்களை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். எதிர்காலத்தில் அரிமர சந்தையில் முதன்மையான வர்த்தகப் பெயர் மற்றும் உண்மையான தலைவராக அரச மரக் கூட்டுத்தாபனம் இருக்கும் என இறுதியாக அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நான் உறுதியளிக்கின்றேன்.



உதய. சீ. வலிசிங்ஹ

தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

பொது முகாமையாளரின் (பிரதான நிறைவேற்று அதிகாரி) மீளாய்வு



2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த நிதி மற்றும் கணக்காய்வு கூற்றுகள், நிதி நிலைமை, விரிவான வருமானம், காசுப் பாய்ச்சலின் மாற்றங்கள், கவனிக்கப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம் மற்றும் ஏனையவை உள்ளடக்கி மீளாய்வு செய்வதற்கு கிடைப்பதையிட்டு நிறுவனத்தின் பொது முகாமையாளரின் (பிரதான நிறைவேற்று அதிகாரி) ஆக நான் மகிழ்ச்சியடைகின்றேன். 2021 ஆம் ஆண்டிற்குள் எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்கள், தகவல்கள், எனது ஆலோசனைகள் மற்றும் அவதானங்கள் என்பன கவனித்துப் பார்க்கப்பட்ட செயற்பாட்டு ஆண்டு நிறைவடையும் போது இலக்கினை நோக்கிய பெறுபேறுகளை வெற்றியீட்டிக் கொள்வதற்காக கூட்டுத்தாபனம் பாடுபட்டதென நான் நம்புகிறேன்.

உலகளாவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையிலும் பெற்றுக் கொண்ட வெற்றி

2021 ஆண்டு சிறந்தவொரு ஆண்டாக இருந்தது. 2021 ஆண்டில் ஆரம்ப அரைக் காலத்தில் மிகவும் கடினமான காலமொன்றாக விளங்கினாலும், ஆண்டிறுதியாகும் போது கடந்து சென்ற வருடம் சிறந்த வருடமொன்றாக இருந்ததென எனக்குத் தெளிவாகியது. ஆனால், கடந்த வருடம் சந்தையின் முன்னேற்றத்துக்காக எம்மால் நீண்ட கால முயற்சியைத் தாங்கிய வருடமொன்று என்பதனாலாகும். நாட்டின் சந்தையைத் திறப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் இடமளிக்காதவாறு நாடளாவிய ரீதியில் கொரோனா ஊரடங்குச்சட்டம் இடப்பட்டிருந்த காலமொன்றில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் திறக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டினுள் அங்கு ஏற்றறக்கங்கள் இருந்தாலும் அது சாதாரண காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளன என பின்னூட்டலின் போது எமக்கு விளங்கியது. 2021 ஆண்டின் ஆரம்ப மாதங்களில் நாடளாவிய ரீதியில் கொரோனா ஊரடங்குச்சட்டம் இடுவதற்கு முன்னர், உலகம் முழுவதும் ஏனைய சந்தைகள் போன்றே, மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகளுக்கான சந்தைக்கும் கொரோனா தொற்றுநிலைமை அதிகமாகத் தாக்கம் செலுத்தியது. மரச் சந்தையின் வெற்றியை நோக்கிச் செல்வதற்கு வளங்கள் மற்றும் தொழிநுட்ப நவீனங்கள் மாத்திரம் போதுமானதாக இல்லை. சந்தை சிறப்பாக இருக்க வேண்டுமெனின், நுகர்வோருக்கு சந்தையின் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். உற்பத்தியை அதிகரிப்பது போன்றே நம்பிக்கையான விற்பனையை தக்க வைத்துக் கொள்வதற்கும் ஊரடங்குச்சட்டம் இடப்பட்ட சிரமமான காலப் பகுதியினுள் கவனிக்கப்பட வேண்டிய வேகமொன்றில் கவனமாகச் செயற்படுவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிக்குழு செயற்பட்டது. உடனடியாக மாறுபடும் நிலைமையின் கீழ் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு அத்தியாவசிய சேவையை நடத்திச் செல்வதற்காகச் செயற்பட்டனர். அந்நெருக்கடியான காலப் பகுதிக்குள் அவர்களின் உயர்ந்தபட்ச அரப்பணிப்புடனும் பொறுமையுடனும் சிறந்த சேவையொன்றை வழங்குவதையிட்டு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் எனது அனைத்து பணியாளர் குழுவினருக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். அனைத்து ஊழியர்களும் தமது பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றும் போது எமக்கு சிறந்த முறையில் முன்னோக்கிச் செல்ல முடியும் என நான் நம்புகின்றேன். அரச மரக் கூட்டுத்தாபனம், அனைவரினதும் ஒத்துழைப்புடன், மிக நம்பிக்கையானதும் சிறந்த நிலையிலும் மர மற்றும் மரத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை வழங்குவதில் தேசத்தின் தலைவனாகும் நோக்குக்குக் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் உயர்ந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது.

தொழிற்பாட்டு மீளாய்வு

அறிக்கையிடும் காலப் பகுதியினுள் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நவடிக்கைகளை மீளாய்வு செய்வது எனது கடமையாகும். வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் கீழ் அரச மரக் கூட்டுத்தாபனம் செயற்படுகின்றது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பணி வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்தது. அவர்களின் வன முகாமைத்துவத் திட்டத்தின்படி மரங்களை வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட வனச் செய்கைகளை வருடாந்தம் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு விடுவிக்கின்றது. முழு நாடும் மர விநியோகிஸ்தர்களில் முதன்மையாளராக, அரச மரக் கூட்டுத்தாபனம் மரங்களை வெட்டியதன் பின்னர் விடுவிக்கப்பட்ட நிலத்தை உரிய நேரத்துக்கு மீண்டும் வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒப்படைக்கும் பொறுப்பைக் கொண்டது.

இதற்கு மேலதிகமாக நீதிமன்றம், பிரதேச செயலகம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களிடமுள்ள காணிகளிலிருந்தும் கவனிக்கப்படத்தக்க மர அளவொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையை மேற்கொள்கின்றது. அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் வெட்டப்பட்ட மரங்களைப் போன்றே அன்பளிப்பாகக் கிடைக்கும் மரங்களுக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக மாறுகின்றது. அதன்படி குற்றிகள் தவிர்ந்த அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளாக அரியப்பட்ட மரங்கள், யானைவேலிக் கம்பங்கள், வேலிக் கம்பங்கள், வட்டக் கம்பங்கள், சிலிப்பர்கள், மின் விநியோகக்

கம்பங்கள், விறகுகள் போன்றே தளபாடங்கள் எனும் பல்வேறு பெறுமதி சேர்க்கப்பட்ட வகைகளாகும். இவ்வாறு அரச மரக் கூட்டுத்தாபனம் 53 வருடங்களாக பெருமைமிக்க வரலாறொன்றைக் கடந்துள்ளது.

நிதிப் பொறுப்பு

இலங்கை நிதிக் கொள்கைகளின்படி இந்நிதிக்கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சாராரணமாக முன்வைத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதோடு, முகாமைத்துவம் தீர்மானிக்குமாறு உள்ளக நிர்வாகமொன்றுக்கான துல்லியமான அளவு கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றினைத் தயாரிப்பது அத்தயாவசியமாகும். எனது பொறுப்பு என்பது நிதி சொத்துக்கள் மற்றும் வைப்புக்களை வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ள முறை மற்றும் எழுகின்ற நிதி மற்றும் முகாமைத்துவ இடர்களின் தன்மை மற்றும் அளவின்படி இந்நிதிக்கூற்று பற்றிய ஆலோசனையொன்றை முன்வைப்பதாகும். முடிவடைந்த வருடத்தின் தேறிய விற்பனைப் புரள்வு ரூ. மில்லியன் 5,696 ஆவதோடு, வரி மற்றும் வரி செலுத்துவதற்கு முன்னர் ஈட்டப்பட்டுள்ள இலாபம் ரூ. மில்லியன் 1,496 ஆவதோடு, வரி மற்றும் வரி செலுத்தியதன் பின்னர் இலாபம் ரூ. மில்லியன் 1,136 ஆகும். ஈட்டிய வருமானம் மற்றும் இலாபம் கடந்த 2020 ஆண்டை விட அதிகமாகும். எவ்வாறாயினும், ஏனைய பெறுமதி சேர்க்கப்பட்ட மர உற்பத்திகளை விட உயர்ந்த வருமானம் குற்றிகளை விற்பனை செய்வதனால் ஈட்டப்பட்டுள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.மில்லியன் 3594 மற்றும் நிர்வாகச் செலவு ரூ. மில்லியன் 903 பெறுமதியை எடுக்கிறது.


2020 ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2021 இல் முன்னைய ஆண்டை விட முன்னேற்றமொன்றை அரச மரக் கூட்டுத்தாபனம் காட்டுகின்றது. சரியான வழிகாட்டல் மற்றும் உழைப்பு பாடுபட்டு பணியாற்றும் அர்ப்பணிப்புள்ள பணிக்குழு அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் உறுதிமிக்க சொத்தாவதோடு 100 ரூ. மில்லியனான பாரிய வருமானமொன்றை வரியாக ஈட்டித் தந்து திறைசேறியை நிரப்புவதற்கு முடிந்தது.

அதற்கு மேலதிகமாக 2021 ஆண்டில் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் வன முகாமைத்துவ திட்டத்தின்படி வெட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 1,108 ரூ.மில்லியன் பெறுமதியுடனான மரங்களைப் போன்றே வனஜீவராசிகள் திணைக்களத்தினால் 36 ரூ.மில்லியன் பெறுமதிமிக்க மரங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்தது. அதனால் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் அரச பாதியாக 1,144 ரூ. மில்லியன் வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒத்துழைப்புடன் பணியாற்றும் உதவி பணிக்குழுவொன்றும் இருந்ததனால், கொரோனா தொற்றுநிலையின் கீழும் தெளிவாகத் தென்படும் இலாபத்தை உழைப்பதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது என நான் பெருமையுடன் தெரிவிக்கிறேன்.

தேசத்தின் நம்பிக்கையான உற்பத்திகள்

அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் குற்றிகள், அரியப்பட்ட மரங்கள், சிலிப்பர், வேலிக் கம்பங்கள், மின்கம்பங்கள், யானைவேலிக் கம்பங்கள் போன்றே தளபாடங்கள் உயர்ந்த வகுப்பில் தரமான உற்பத்திகளை வழங்குகின்றது. அரச மரக் கூட்டுத்தாபனம் இதுவரை இலங்கையில் மர விநியோகத்தில் முதன்மையாளர் ஆகியது. ஏனைய மரக் கைத்தொழிலுடன் இணைந்து போட்டியிடும் பாரிய சவாலொன்றாக இருந்தாலும், உயர் தரத்தில் நம்பிக்கையான உற்பத்திகளை வழங்குவதனால் அரச மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் மக்களின் மனங்களை வெல்கின்றது. அரச வர்த்தக நிறுவனமொன்றாக நாம் அதிகமாக மரங்களை வழங்குவது மொரட்டுவ மரக்கைத்தொழிலுக்காகவேயாகும். புகையிரதத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் இலங்கை மின்சார சபை எமது சிலிப்பர், யானைவேலிக் கம்பங்கள், வேலிக் கம்பங்கள் மற்றும் மின்கம்பங்களைக் கொள்வனவு செய்யும் எமது பிரதான கொள்வனவாளர்கள் ஆவர். மேலும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தரமான பாரம்பரிய தளபாடங்கள் இன்னும் எமது நுகர்வோர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது. வசதி மற்றும் உள்ள தரமான மரத் தளபாடங்களை வழங்குவதனால் நுகர்வோரின் உயர்ந்த பிரச்சாரமும் கிடைத்தது. அதே போன்று அரச மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் இலாபத்தை ஈட்டுவதை விட சிறந்த சேவையொன்றை நுகர்வோருக்கு வழங்குவதற்கு முயற்சி செய்கின்றது.

அரச மரக் கூட்டுத்தாபனம் உற்பத்திகளின் மூலம் வருமான உருவாக்கம்



அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள்

நிறுவனத்தின் சமூக செயற்பணி

வருமானத்தை ஈட்டுவதற்கு அப்பாற் சென்ற சமூக செயற்பணியொன்று நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்களின ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவினால் எப்போதும் நிறுவனத்துடன் போன்றே சமூகத்துடனுள்ள பிணைப்பிலான அதிக ஈடுபாடொன்றைக் காண்பிப்பதனால் அவ்வாறான பணிகள் எப்போதும் உள்ளன. 2021 இல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவினால் செலவு செய்யப்பட்டுள்ள முழு நிதி ரூ. 3045123/- ஆக மொத்தமாக பணிக்குழுவில் 690 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 67 க்காகவும், சேவை வழங்குனர்கள் 36 பேருக்காகவும் நிகழ்நிலை வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 4 க்கும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மேலும் அரச மரக் கூட்டுத்தாபனத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பிரிவு நிறுவனத்தின் வணிகத் தேவைகளைப் போன்றே மரம் தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சமூகத்துக்குத் தேவையான புதிய அறிவை மற்றும் மரம் தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 இல் அவர்கள் ஆய்வுப் பத்திரங்கள், புத்தக பந்திகள், சஞ்சிகை கட்டுரைகள் உட்பட சுமார் 12 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் ஒரு பிரதான பணியாக இருப்பது மரங்களை இனங்காணல், உள்ளக இழையப் பகுதியைப் பரீட்சிப்பதற்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதாகும். மரம் மற்றும் அவற்றின் இழையப் பரம்பலை பகுப்பாய்வு செய்வதனால் மரங்களை இனங்கண்டு கொள்வது இடம்பெறுகின்றது. இதன் கீழ் வருடாந்தம் மரங்களை இனங்கண்டு கொள்ளும் சான்றிதழ் மற்றும் பிற அறிக்கைகள் சுமார் 150-200 அரச மற்றும் அரசு அல்லாத நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டன. மரங்களை இனங்கண்டு கொள்வதற்கு மேலதிகமாக, MOR, MOE, சுருக்கமான பரிசோதனை, அடர்த்தி பரிசோதனை, அழுத்த பரிசோதனை, கால இருப்பு மற்றும் பாதுகாப்புக்காக போரோன் பரிசோதனை, CCB பரிசோதனை போன்ற மரத்தின் உறுதியான அறிகுறிகளை பகுப்பாய்வு செய்வது இடம்பெறுகின்றது. அதற்கு மேலதிகமாக அரச மரக் கூட்டுத்தாபனம் 14 வலயங்கள் முழுவதிலும் நாற்றுமேடைகள் 25 இனை நடத்திச் செல்வதோடு பெறுமதிமிக்க மரக் கன்றுகளையும் உற்பத்தி செய்கின்றது. ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் மூலம் வெவ்வேறு அரசு அல்லாத நிறுவனங்களுக்கு இக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. அதன்படி 31.12.2021 ஆகும் போது நாட்டின் வனப் போர்வை உயர்த்தும் நோக்கினை 2021 ஆம் ஆண்டில் சுமார் 31268 கன்றுகள் ஏனைய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

எதிர்கால திட்டங்கள்

கொவிட் 19 இன் தாக்கம் மற்றும் வியாபார பிரச்சினைகளில் தலையீடுகள் இலங்கையின் பொருளாதாரம் 2021 இல் வேகமாக கீழிறங்கியது. இது சாதாரணமாக தனியார் பயன்பாட்டில் தாக்கம் செலுத்தியதோடு, மரம் உள்ளிட்ட பல பிரிவுகளில் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தியது. இச்சவால்களின் மத்தியிலும், வருமானத்தை உயர்த்துவதற்காக செலவுகளைக் குறைப்பதற்கு முயற்சி செய்தல், மர உற்பத்தித் தொகுதிகளை உயர்த்துதல் என்பவற்றிலான உயர்ந்த கவனிப்பு வழங்குதல் வினைத்திறனுடன் முகாமைத்துவ அமைப்பொன்றைக் கட்டியெழுப்புதல், 2020 வியாபார சிக்கல்களைக் கவனிக்கும் போது நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் அறிவின் அடிப்படையில் மீளாய்வு ஆண்டிற்குள் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு உறுதியான செயலாற்றுகையொன்றை வழங்குவதற்க காரணமாகியது. இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணங்களைப் பராமரிப்பதற்காகவும் ஏற்றுமதி சந்தைக்காகவும் எதிர்பார்ப்பதோடு திறைசேரியின் அனுமதி எதிர்கால செயன்முறைகளில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் புதிய ஊழியர்களை இணைத்துக் கொண்டு பணிக்குழுவை விரிவுபடுத்தியதன் பின்னர் பைனஸ் மற்றும் கருங்காலி தளபாடங்களை ஏற்றுமதி செய்வதற்கும் எதிர்பார்க்கின்றது. அதனால் உற்பத்தி எல்லைக்குள் வெவ்வேறுபடுத்துவதற்காக பெறுமதியை சேர்த்தலை மேற்கொண்டு முதலீட்டு சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் அதேவேளை Pinus மர உற்பத்திக்காக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்துவதற்காக அரச மரக் கூட்டுத்தாபனம் தற்போதும் கவனத்தைச் செலுத்திக் கொண்டுள்ளது. உள்நாட்டு பைனஸ் சந்தையை உறுதிப்படுத்துதல் மற்றும் பைனஸ் மர அறுவடைக்காக அரச வனக் காணிகளின் ஏகபோகத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் இப்போதும் அமைச்சரவையின் அனுமதியை வேண்டியுள்ளோம். எதிர்காலத் திட்டங்களில் பிரதானமாக கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொண்டு தளபாடங்கள் பிரிவினை விருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய பைனஸ் மர உற்பத்தியை சமூகத்துக்கு பொருளாதார, சூழல் மற்றும் பாதுகாப்பு பிரதிபலன்களை விருத்தி செய்கின்றன. அரச மரக் கூட்டுத்தாபனம் மரங்களை வெட்டும் முறை, பதனிடல் மற்றும் பாதுகாப்பு முறை போன்றே தரத்திலும் கூடிய உற்பத்திகளை தயாரிப்பதற்காக மரத் தரப்படுத்தும் செயன்முறையை புதிதாக உருவாக்குவதில் அதிக கவனத்தைச் செலுத்துகின்றது. Finger joint அலகினையும் விருத்தி செய்வதற்குத் தேவையாவதோடு அதிகமான நாடுகளில் அவ்வாறான உற்பத்திகளுக்கு அதிக விருப்பொன்றைக் காட்டுவதனால் அண்மித்த எதிர்காலத்தில் Finger joint உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கும் முயற்சி செய்கிறது. ISO தரச் சான்றிதழ் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தளபாட காட்சியறைகளுக்குப் பெற்றுக் கொண்டு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் செயன்முறைகளை முறைப்படுத்தி புதிய நோக்கங்களை கூட்டுத்தாபனத்தின் செயன்முறைக்கு இணைத்து எதிர்காலத்தில் மாறும் சந்தைச் சூழலுக்கு ஏற்ற வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வரவேற்பு

தலைவர், பணிப்பாளர் சபை, முகாமைத்துவக் குழு போன்றே ஊழியர் பணியாளர் குழுவினால் வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பு பற்றி எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன். இச்சிக்கலான நிலைமையிலும் எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். அவர்களின் முதன்மையான மரம் மற்றும் மரத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் வழங்குனர்களைத் தெரிவு செய்தமைக்காக, அவர்களின் தனித்துவமான உற்பத்திகளை வழங்கி நாம் எம்முடைய சேவையை உயர்ந்த பட்சமாக வழங்குவதற்கு எப்போதும் தயாராக உள்ளோம். இறுதியாக என்னுடைய மனமார்ந்த நன்றிகளை வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், அவர்களின் இராஜங்க அமைச்சர், எமது அமைச்சின் செயலாளர் அவர்களின் உதபி பணியாளர் குழுவினர் மற்றும் வன பாதுகாப்பாளர் நாயகம் உட்பட வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாளர் குழுவினருடன் எமது நோக்கங்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எமக்கு வழங்கிய அயராத ஒத்துழைப்பு, 2021 சவாலான வருடத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவியாக அமைந்தது என தெரிவித்துக் கொள்கின்றேன்.



கலாநிதி என். டீ. ருவன்பதிரண
பொது முகாமையாளர் (பி. நி .அ)
அரச மரக் கூட்டுத்தாபனம்

எமது பொறுப்புக்கள்

- காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக் குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும்
- இப்பணிகளுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்.
- மரக் குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல், பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலர வைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்தல்.
- அரிமர விற்பனை நிலையங்களை நடத்திச் செல்லுதல்.
- அரிமர உபபொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்
- அரிமரங்களை இறக்குமதி செய்தல்
- புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்
- விவசாய உற்பத்திகள்
- அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் பகுதியளவு முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்
- தனியார்க் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்
- காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்
- பிரம்புகளை இறக்குமதி செய்தல்
- மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங்காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்குதல்
- அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்
- கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்காக முதலீடு செய்தல்

எமது வர்த்தகப் பெறுமானங்கள்

- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக் கூடிய பொதுத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங் கண்டுள்ளோம்.

- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணிகள் என நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.


- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் வினைத்திறன் மட்டத்தை மேம்படுத்துவதற்குச் செயற்படுகின்றோம்.

- வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா அலுவலகங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.

- அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.

- எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

பணிப்பாளர் சபை – 2021



திரு. உதய. சீ. வலிசிங்ஹ

தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

திருமதி. பீ. என் கமகே

பணிப்பாளர்
திறைசேறியின் பிரதிநிதி

திரு.கே. எம். ஏ. பண்டார

பணிப்பாளர்
வன பாதுகாப்பாளர் நாயகம்

திரு. பீ. ஏ. தர்மரத்ன

பணிப்பாளர்

திரு. பீ. டீ. குணதிலக்க

பணிப்பாளர்

திரு. எச்.கே. எம்.ஜே. எச். குமாரசிங்ஹ

பணிப்பாளர்


திரு. ஜீ.கே. பிரசன்ன

பணிப்பாளர்

திருமதி. எம். ஜீ. திலானி சாரிக்கா

பணிப்பாளர் சபையின் செயலாளர்

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு – 2021



திரு. ஜீ. டீ. எஸ். குமாரசிங்ஹ

பிரதி பொது முகாமையாளர்
- நிதி-

திரு. எம். ஏ. சீ. என் . சமரசிங்ஹ

பிரதி பொது முகாமையாளர்
- மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்

திரு. எம். சீ. தேவேந்திர

பிரதி பொது முகாமையாளர்
- செயற்பாடு

திரு. டபிள்யூ. பீ. சமந்த

பிரதி பொது முகாமையாளர்
- சந்தைப்படுத்தல்

திரு. ஜீ. ஜீ. திஸர கமகே

பிரதி பொது முகாமையாளர் (பதில்)
- பொறியியல் மற்றும் உற்பத்தி

2021 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் மீளாய்வு

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் எமது ஆண்டறிக்கையையும் முன்வைப்பதில் பணிப்பாளர் சபையாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அறிமுகம்

அரச மரக் கூட்டுத்தாபனம் 1968 இல் இலக்கம் 49 உடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் நிறுவப்பட்ட அரச நிறுவனமொன்றாக நிறுவப்பட்டது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் "சம்பத்பாய" பத்தரமுல்லவில் அமைந்துள்ளதோடு, பிரதேச அலுவலகங்கள் நாடு பூராகவும் அமைந்துள்ளது.

முதன்மைச் செயற்பாடு

அரச மரக் கூட்டுத்தாபனம் முதன்மையாக தமது வருமானத்தை அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் தனது வருமானத்தை ஈட்டுகிறது.

வர்த்தக மீளாய்வு

கொவிட் -19 தொற்று 2020 ஆம் ஆண்டில் வியாபாரங்கள் தொடர்பில் பாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தியது. இதன்படி 2020 நிதியாண்டு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கும் பாரியளவில் சவாலாக இருந்ததோடு, அதன் தாக்கத்தை தொடர்ச்சியாக இவ்வருடத்திலும் அனுபவிக்க வேண்டியுள்ளது.


பெறுமதியை அதிகரிப்பதற்காக செலவினை தொகுதி சார்ந்த வளர்ச்சியில் கிரயத்தை உச்சப்படுத்தல், தொகுதி வளர்ச்சி தொடர்பில் கூடிய கவனத்தைச் செலுத்துதல், சிறந்த முகாமை உட்பட 2020 ஆம் ஆண்டில் முகம்கொடுக்க வேண்டியிருந்த வியாபார சிக்கல்களுக்காகத் தீர்வு தேடும் போது நாம் பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் அறிவினைப் பயன்படுத்தி கொவிட் -19 ஊடாக உருவாகிய சவால்களை கருத்திற் கொள்ளாமல், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பலமான செயலாற்றலொன்றை அடைந்து கொள்வதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடியுமாக இருந்தது.

நிதிசார் செயலாற்றுகை


கொவிட் -19 தாக்கம், வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் எமது சில உற்பத்திப் பொருட்களின் செயற்பாடு தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் 2021 ஆம் ஆண்டின் வருமானமாக ரூபா 5,696 மில்லியன் ஈட்டியிருந்ததுடன், அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 43% உயர்வாக உள்ளது. அவ்வாறே, கூட்டுத்தாபனத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக ஈட்டியுள்ள மொத்த இலாபம் ரூபா 2,754 மில்லியன் ஆவதோடு, அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 58% உயர்வாக உள்ளது.

செயலாற்றுகை	2021	2020
	ரூ. மி	ரூ. மி
விற்பனைப் புரள்வு	5,696	3,981
மொத்த இலாபம்	2,754	1,746
செயற்படு இலாபம்	1,245	369
செயற்பாடற்ற இலாபம்	252	200
திறைசேற வரி மற்றும் வருமான வரிக்கு முன்னைய இலாபம்	1,496	569


விற்பனைப் புரள்வு



மொத்த இலாபம்



வரிக்கு முன்னரான தேறிய இலாபம்



அரச மரக் கூட்டுத்தாபனத்தில் மீளாய்வாண்டில் ரூபா 1496 மில்லியனை வரி முன்னரான தேறிய இலாபமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 163% இலான அதிகரிப்பொன்றாகும். பெறுமதியை அதிகரிப்பதற்கு கிரய உச்சப்படுத்தல் முகாமைத்துவம், தொகுதி வளர்ச்சி தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் மற்றும் வளங்களை னைத்திறனாகப் பயன்படுத்துதல் இவ்வதிகரிப்பினை நெருங்குவதற்கு கூடிய பங்களிப்பொன்றை வழங்கியுள்ளது.

இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையையின் உயர் வீதத்தினைக் குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு உறுதுணையாக அதிகமான வேலைவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சந்தைக்குத் தரமான உற்பத்திகளை வழங்குதல் தமது பொறுப்பு என்பதை அரச மரக் கூட்டுத்தாபனம் தனது பொறுப்பாகக் கருதுகின்றது. 2021 ஆம் ஆண்டில் பொருளாதார வீழ்ச்சியின் கீழும் கூட கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி ஊழியர் கிரயமாக ரூபா 584 மில்லியனைச் செலவழித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் மொத்த ஊழியர் எண்ணிக்கை 1606 உம் 2020 ஆம் ஆண்டில் 1708 உம் இருந்தனர்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்காக சொத்துக்கள் மீதான நலன்கள் மற்றும் உரித்து அடிப்படையில் இலாபம் பின்வருமாறு காணப்படுகின்றது.

செயலாற்றல்	சொத்துக்களின் மீது பரம்பல்	பங்கு மீது நலன்கள்
2021	13%	18%
2020	6%	8%

2020 ஆம் ஆண்டின் போது 6% வரி கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சராசரி சொத்துக்கள் மீதான நலன்கள் 2021 ஆம் ஆண்டின் போது 13% வரை அதிகரித்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டாகும் போது 8% ஆன சராசரி பங்கின் மீதான இலாபம் (ROE) 2021 ஆம் ஆண்டிலும் 18% வரை அதிகரித்திருந்தது. கொவிட் -19 தொற்று உலகளாவிய தொற்றுநோய் மத்தியிலும் மீளாய்வாண்டில் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 1,373 மில்லியன் ஆக இருந்ததுடன், திறைசேறிக்கு செலுத்திய ரூபா 100 மில்லியன் வரியும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி

செயற்பாட்டு செயன்முறைச் சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினைப் பேணுதல் போன்றே நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்தினை அதிகரித்துக் கொள்வதற்கும் போன்றே நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் பிழைப்பிற்கும் இலாபத்திற்கும் முக்கியமானது என்பது எமது கடும் நம்பிக்கையாகும்.
அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்கி அவற்றிற்கு இணங்க செயற்படல், வேலைத்தள வகைப்படுத்தல் சரிபார்த்தல் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞான முறையில் அரிமரங்களை வெட்டுதல், முறையான அரிமரப் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு உத்திகள், எல்லா இயந்திர உபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பு, நிறுவுகை மற்றும் பராமரிப்பு, ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகள் என்பனவற்றை குறுங்கால மற்றும் நெடுங்கால குறிக்கோள்களை அடைவதற்கு நிலைபேறான முறையில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. உண்மையாகவே அரச மரக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நிலைபேறான வன முகாமைத்துவத்திற்காக பங்களிப்பை வழங்கும் பிரதான நிறுவனமொன்றாகும்.

- அதற்கு மேலதிகமாக தொழிற்சாலைகளின் போட்டியாளர்களை விட போட்டியுடனான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனம் ஆலோசனை செய்துள்ளது.
- வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற வனச்செய்கை விஞ்ஞான அரிமர பிரித்தெடுப்பிற்காக நடவடிக்கை எடுத்தல்.
- சந்தைக்காக மரக் குற்றிகள், புகையிரத திணைக்களத்துக்காக சிலிப்பர்கள், மின்சார சபைக்காக மின்கம்பங்கள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்காக யானைவேலிக் கம்பங்கள் போன்றே வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கிழிக்கப்பட்ட அரிமரங்களை உற்பத்தி செய்தல்.
- வணிக பெறுமதிமிக்க அரிமரங்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களிலிருந்தும் தனியார் காணிகளிலிருந்தும் கொள்வனவு செய்தல்.
- நன்கொடை மற்றும் வனமோசடி அரிமரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வனச்செய்கை நிகழ்ச்சிகளுக்காக உற்சாகத்துடன் பங்குபற்றுல் (செயலாற்றுதல் மற்றும் பங்குபற்றுதல்)
- புகையிரத சிலிப்பர்களை இறக்குமதி செய்து பெறுமதியை சேர்ப்பதன் பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்தல்.

அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட முதிர்ந்த வனப் பிரதேசங்களின் அளவு குறைவடைதல் அண்மைக் காலமாக நாம் முகம் கொடுத்து வரும் பிரதான சவாலாகும். வன பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் விடுவிக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் அளவு திறைசேறியின் இணக்கப்பாட்டுடன் மேலதிக அளவனை விடுவித்துக் கொள்வதும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் சில்பர் மற்றும் மின் பரிமாற்றக் கம்பங்களுக்குத் தேவையான மரங்களைப் பெற்றுக் கொள்வதும், இலங்கை பேருந்து மற்றும் காணி புனர்நிர்மாண ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளிலிருந்து மரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வன முகாமைத்துவத்தின் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூக்கலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மரங்களை வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள வன முகாமைத்துவப் பகுதிகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

மர இனம்	முற்றாக வெட்டுதல் (ஹெக்டயார்)		மெல்லியதாக்குதல் (ஹெக்டயார்)	
	2021	2020	2021	2020
தேக்கு	541	692	490	132
யூக்கலிப்டஸ்	160	51	238	296
பைனஸ்	265	109	-	-
காயா	-	-	244	24
எக்கியா	35	8	-	-

மரக்குற்றிகளை அரிமரத் துண்டங்களாக்குதல்

2021 ஆம் ஆண்டின் அரிமர உற்பத்தி 3924 கன மீற்றருக்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டினுள் கிழிக்கப்பட்ட 3387 கன மீற்றர் பலகை ஆலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், 3137 கன மீற்றர் நாடு பூராகவும் அமைந்துள்ள விற்பனைக் களஞ்சியங்கள் மூலம் அரிமரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மின் கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

2021 ஆம் ஆண்டினுள் 29,049 சிலிப்பர்கள் மற்றும் 11,913 யானைவேலிக் கம்பங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தெமுல்ல, கெப்பெட்டிபொல மற்றும் பூஸ்ஸ பயன்படு நிலையங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிலிப்பர் உற்பத்தி 24% இனால் அதிகரித்துச் சென்றுள்ளது.

தளபாட உற்பத்தி

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தெமுல்ல மற்றும் பூஸ்ஸ ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 389 ரூபா மில்லியன் பெறுமதியுள்ள தளபாடங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ள ஆண்டினுள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 390 ரூபா மில்லியன் (வரியுடன்) ஆன பெறுமதியுடைய தளபாடங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை, பண்டாரவளை மற்றும் பத்தரமுல்லை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம்

		உற்பத்தி அளவு		விற்பனை அளவு		மொத்த வருமானம்	
			2020	2021	2020	2021(ரூ. மி)	2020(ரூ. மி)
குற்றிகள்	க. மீ	127,698	106,609	141,556	103,955	4,929	3,299
மரத்துண்டங்கள்	அலகு	3,924	3,387	3,137	2,279	309	222
சிலிப்பர் கட்டைகள்	அலகு	29,049	38,380	29,002	36,552	287	371
மின்கம்பங்கள்	அலகு	2,624	-	2,729	2,287	30	24
யானைவேலிக் கம்பங்கள்	அலகு	11,913	9,171	17,412	9,347	104	48
சுற்றுக் கம்பங்கள்	அலகு	97,846	67,589	101,880	76,761	12	9
விறகு	க.மீ	86,971	82,856	70,075	60,171	49	40
வேலிக் கம்பங்கள்	அலகு	151,893	105,453	164,913	117,430	22	19
தளபாடங்கள்	ரூ.மி	389	233			390	237

அடைவுகளுக்கான இலக்குகளைக் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவானதாகும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வருட இறுதியில் அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையில் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் உள்ளிட்ட ஒவ்வொரு பிரிவுடனும் தொடர்பான மற்றும் ஏற்படக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக தலைவரின் தலைமையில் சகல பிரதேச முகாமையாளர்கள் மற்றும் கூட்ட,த்தாபனத்தின் சிரேஷ்டமுகாமையாளர்களின் பங்குபற்றுதலுடன் மாதாந்த பிரதேச முகாமையாளர்களின் கூட்டமொன்று அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் மூலம் நடாத்தப்படுகின்றது.

இலங்கை தற்பொழுது கொவிட் -19 தொற்றாளர்களின் அதிகரிப்பினையும் எதிர்கொண்டு நிற்கின்றது. தொற்றுநோயின் எதிர்றையான தாக்கங்களிலிருந்து ஒரு படி மேலே சென்று எமது தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்காக நிறுவனம் எனும் அடிப்படையில் எம்மால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளின் அடிப்படையில் எமது நிறுவனத்தின் நோக்கங்கள் முன்னைய வருடங்களை விட பொருத்தமாக அமைந்துள்ளன. எமது சமூகம் சார்ந்த பொறுப்புக்களை நாம் உணர்ந்து கொண்டுள்ளதோடு, எமது பங்குதாரர்களுக்கு உயர் பெறுமதியை வழங்கி அவர்களுடன் சேர்ந்து முன்னேறிச் செல்லும் வகையில் நாம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம்.

பணிப்பாளர் குழு சார்பாக ஒப்பமிட்டவர்



உதய சீ வலிசிங்க
தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

எமது மேவுகை வலயங்கள்

இட வரைபடம் - அரச மரக் கூட்டுத்தாபனம்

Head Office - Battaramulla (A12)

Regional Offices

1 Ampara (G11)
2 Anuradhapura (C07)
3 Bandarawela (E12)
4 Colombo (A13)
5 Jaffna (B02)
6 Kurunegala (C10)
7 Kandy (D11)
8 Matara (C16)
9 Monaragala (F12)
10 Nuwara Eliya (D12)
11 Polonnaruwa (E08)
12 Rathnapura (C13)
13 Boossa (B15)
14 Keppetipola (D12)
15 Kaldemulla (A13)

Depots (Sales Centers)

Ampara Region
1 Ampara Depot (G11)
2 Padiyathalawa Depot (F11)
3 Batticaloa Depot (G09)

Anuradhapura Region
4 Anuradapura Depot (C07)
5 Medawachchiya Depot (C06)
6 Talawa Depot (C07)
7 Vauniya Depot (C05)

Bandarawela Region
8 Boralanda Depot (E13)


Colombo Region
9 Kadawatha Depot (A12)
10 Mirigama Depot (B11)
11 Willorawatta Depot (A13)
12 Kaldemulla Depot (A13)
13 Egodauyana Depot (A13)
14 Moratumulla Depot (A13)
15 Pannipitiya Depot (A12)
16 Ratmalana Depot (A13)

Jaffna Region
17 Kilinochchi Depot (C03)
18 Oddusudan Depot (D04)
19 Nallur Depot (B02)
20 Jaffna Depot (B02)

Kurunegala Region
21 Kankaniyamulla Depot (B10)
22 Kurunegala Depot (C10)
23 Nikaweratiya Depot (B09)
24 Melsiripura Depot (C10)
25 Puttlam Depot (A08)
26 Bingiriya Depot (A10)
27 Nainamadama Depot (A11)

Kandy Region
28 Pallekelle Depot (D11)
29 Matale Depot (D10)
30 Nelundeniya Depot (B11)
31 Ethgala Depot (C11)
32 Dambuluoya Depot (D09)
33 Naula (Medapihilla) Depot (D09)

Matara Region
34 Hambantota Depot (E15)
35 Unawatuna Depot (B15)
36 Ambalangoda Depot (B15)
37 Talalla Depot (D16)



Monaragala Region
38 Kumbukana Depot (F13)
39 Wellawaya Depot (E13)
Nuwara Eliya Region
40 Nuwara Eliya Depot (D12)
41 Kitulgala Depot (C12)
42 Harasbedda Depot (D12)
Polonnaruwa Region
43 Kaduruwella Depot (E08)
44 Wilankulama (Trincomalee) (E06)
45 Minneriya Depot (E08)
Rathnapura Region
46 Dela Depot (C13)
47 Beruwala Depot (A14)
48 Timbolketiya Depot (D14)
49 Matugama Depot (B14)
Boossa Region
50 Boosa Depot (B15)
Keppetipola Region
51 Keppitipola Depot (D12)

Furniture Showrooms
1 Head Office - Battaramulla (A12)
2 Rathmalana (A13)
3 Boossa (B15)
4 Pallekele (D11)
5 Ampara (G11)
6 Rathnapura (C13)
7 Talalla (D16)

Furniture Factories
1 Ampara (G11)
2 Kaldemulla (A13)
3 Boossa (B15)

Circuit Bungalows
1 Nuwara Eliya - Kandapola (D12)
2 Nuwara Eliya - Kandapola (New) (D12)
3 Timbolketiya (D14)
4 Sella Kataragama (F14)

Training Centers
1 Kaldemulla - TTTI (A13)
2 Head Office - IT (A12)

Laboratories
1 Head Office (A12)

Mechanical Workshops
1 Kaldemulla (A13)
2 Boralanda (E13)
3 Keppetipola (D12)

Sawmills
1 Kaldemulla (A13)
2 Boossa (B15)
3 Ampara (G11)
4 Keppetipola (D12)
5 Talalla (D16)
6 Ethgala (C11)
7 Dela (C13)
8 Melsiripura (C10)

Seasoning and Impregnation Plant
1 Kaldemulla (A13)
2 Boossa (B15)
3 Keppetipola (D12)

Kaduruwela
Dambulu Oya
Nikaweratiya
Batticaloa
Naula (Medapihilla)
Melsiripura
Bingiriya
Kurunegala
Matale
Kankaniyamull
Padiyathalawa
Nainamadama
Kandy (Pallekele)
Ampara
Mirigama
Nelundeniya
Ethgala
Harasbedda
Kadawatha
Kithulgala
Nuwara Eliya
Kandapola
Battaramulla
Keppetipola
Pannipitiya
Bandarawela
Monaragala
Boralanda
Kumbukkana
Rathnapura
Wellawaya
Dela
Rathmalana
Matugama
Moratumulla
Colombo
Beruwala
Willorawatta
Sella Katharagama
Timbolketiya
Kaldemulla
Egoda Uyana
Ambalangoda
Hambanthota
Boossa
Unawatuna
Matara
Talalla
Dehiwala
Panadura
Moratuwa
Scale - 1 : 500,000
2019-09

கூட்டுத்தாபன நிர்வாகம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் (Corporate governance) உயர் தரத்தில் நடத்திச் செல்வதற்கு பணிப்பாளர் சபை அர்ப்பணிப்போடு செயற்படுவதுடன், அதன் பொறுப்பு பணிப்பாளர் சபையினால் ஏற்கப்பட்டுள்ளது.

பங்குதாரர்களின் பொறுப்புக்களில் கவனத்தைச் செலுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கை மற்றும் பாவனைகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் நிறுவன ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், நுகர்வோர்கள் மற்றும் அது செயற்படுத்தப்படுகின்ற அனைத்து சமூகங்களும் உட்பட அங்குள்ள அனைத்து பங்குதாரர்களின் தேவைகளும் இனங்காணப்பட்டன. இக்கட்டுரையின் மூலம் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்படுகின்ற கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கைகள், பாவனைகள் மற்றும் செயன்பாடுகள் பற்றித் தெளிவுபடுத்தப்படுகின்றது.

பணிப்பாளர் சபையும் அதன் செயற்பாடுகளும்

பணிப்பாளர் சபையின் மூலம் கூட்டுத்தாபனம் நிர்வகிப்பதோடு, கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் கண்காணிப்பும் செய்யப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் ஏழு பேரைக் கொண்டுள்ளதோடு, அதில் பணிப்பாளர்கள் ஐந்து பேர் வரி அமைச்சின் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுவதோடு, பணிப்பாளர்கள் இருவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவர். பணிப்பாளர் சபையின் சுவாதீனத்தன்மை மற்றும் விசேட அறிவு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களில் ஒரு பணிப்பாளர் நிதி அமைச்சினால் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு கூட்டத்துக்கு முன்னரும், முடிவுகளை செயற்படுத்துவதற்காக பணிப்பாளர்களுக்கு உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்களும் பின்னணித் தகவல்களும் வழங்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை, புதிய முதலீடு, மூலதன கருத்திட்டம், உரிய சபையின் அனுமதி தேவையான வேறு பிரச்சினைகள் பற்றிய சபை பத்திரம் கூட்டத்துக்கு முன்னர் முன்வைக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் ஏனைய பணிப்பாளர்கள் மற்றும் வெளிக்கள பங்குதாரர்களுடன் தொடர்ந்து தொடர்புகளைப் பேணுதல், கொள்கைகள் பற்றிய விடயங்கள் தொர்பாக தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மேலும் கூட்டுத்தாபனத்தின் மொத்த வணிகம், செயற்பாடுகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தியின் சகல பிரிவுகளுக்கும் அவர் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, அதற்காக ஏனைய பணிப்பாளர்களினதும் மேல் முகாமைத்துவத்தின் ஒத்துழைப் கிடைக்கும். பணிப்பாளர் சபை கூட்டங்களில் தமது பிரிவுக்குரிய விடயங்கள் கலந்துரையாடப்படும் போது மேல் முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் கூட்டத்தின் இடையில் உரிய சந்தர்ப்பத்தில் முன் நிற்பர்.

பணிப்பாளர் சபையின் பிரதான பணிகள்

- கூட்டுத்தாபனத்தின் வியாபார மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தி ன் செயற்பாட்டுத் திட்டமிடலுக்காக அடிப்படையொன்றாக குறுகிய கால மற்றும் நீண்ட கால வழிமுறைகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தலைக் கண்காணித்தல்
- வியாபாரத்தின் பிரதான இடர்களை இனங்காணல் மற்றும் போதுமான இடர் முகாமைத்துவ அமைப்பு செயற்படுகின்றது என உறுதிப்படுத்தல்.
- உள்ளக நிர்வாகங்களில் போதுமான மற்றும் வினைத்திறன் என உறுதிப்படுத்தல்.
- வருடாந்த மூலதன மற்றும் செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தை அனுமதித்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்
- கூட்டுத்தாபனத்தின் இறுதி நிதிக் கூற்றை அனுமதித்தல்
- சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தல்
- அனைத்து உடன்படிக்கைகள், கையகப்படுத்தல்கள் அல்லது சொத்துக்களை அகற்றுதல் மற்றும் மூலதன கருத்திட்டங்களை அனுமதித்தல்
- திறைசேறியிலிருந்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் கூட்டுத்தாபனத்துடன் நேரடியான அல்லது மறைமுகமான பொருட் தொடர்பொன்று இன்றி சுயாதீனமாவதோடு, அப்பணிப்பாளரிடமுள்ள பரந்த அளவிலான விசேட அறிவு மற்றும் வணிக நிறுவன மற்றும் நிதிச் செயற்பாடுகள் பற்றிய கவனிக்கப்பட வேண்டிய அனுபவங்கள் பணிப்பாளர் சபைக்கு சுயாதீனமானதும் நோக்கு மற்றும் தீர்வினைக் கொண்டு வரும்.

பணிப்பாளர் சபையின் உப குழு

அனைத்து உப குழுக்களையும் நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல், இக்குழுக்களுக்காக உறுப்பினர்களை நியமிப்பதற்காக பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் அவ்வுப குழுக்களுக்காக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுப் பணிப்பாளர்கள் மூவரினைக் கொண்டுள்ளதோடு, அப்பணிப்பாளர்கள் திருமதி பீ. என் கமகே- குழுத் தலைவர், திரு. எச்.கே. எம்.ஜே. எச் குமாரசிங்ஹ- குழு உறுப்பினர் மற்றும் திரு. கே. பிரசன்ன- குழு உறுப்பினர் ஆவர். அனைத்து பிரதி முகாமையாளர்கள் மற்றும் பிரத்தானிகள் தேவையான சந்தர்ப்பங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வர். பக்க இல 30 இல் கணக்காய்வு குழு அறிக்கை, நிதியாண்டினுள் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

உள்ளக நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வினைத்திறனுள்ள உள்ளக நிர்வாக அமைப்பொன்றை நிறுவுதல் மற்றும் நம்பிக்கையான தகவல்கள் உருவாக்கப்படுகின்ற, சரியான மற்றும் முழுமையான அறிக்கையை நடத்திச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை வகிக்கின்றது. இவ்வமைப்புக்கு நிதி, செயற்பாட்டு மற்றும் இடர் முகாமைத்துவம் உட்பட னைத்து நிர்வாகமும் உள்ளடக்கப்படுவதோடு, இடர் முகாமைத்துவத்துக்காக கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்ட உத்திகள் பக்க இல 31 இருந்து 36 வரை இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருட காலப் பகுதியை உள்ளடக்குமாறான வழிமுறைகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் விரிவான வரவு செலவுத்திட்ட செயன்முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வருடாந்த வரவு செலவுத்திட்டம், தீர்மானமான வெற்றியின் முக்கிய காரணிகளை இனங்காண்பதன் மூலம் சகல பிரிவினாலும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு நோக்கங்கள், சபையினால் அனுமதிக்கப்படுவதோடு, ஒவ்வொரு மாதமும் அதன் முன்னேற்றம் பரீட்சிக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக நிர்வாக அமைப்பு வழக்கமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் தேடல்கள் கணக்காய்வுக் குழுவினால் முதலில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் பின்னர் கவனிக்கப்படத்தக்க பிரச்சினைகள் பணிப்பாளர் சபையிடம் அறிக்கையளிக்கப்படும்.

பணிப்பாளர் சபை தற்போது உள்ள உள்ளக நிர்வாக செயன்முறைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு, அதன் செயல்திறன் பற்றி திருப்தியடையும்.

பங்குதாரர்களுடனான தொடர்பு

பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் பிரதான பங்குதாரர்களுடன் சிறந்த உறவொன்றைப் பேணிச் செல்வதிலுள்ள முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளதோடு, முழு கூட்டுத்தாபனத்திற்குள்ளும் இதனை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தினுள் உள்ளக தொடர்பாடல் பிரதானமாக மின்னஞ்சல், நிரூபங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஊடாக இடம்பெறும்.

கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் பெறுமதிகள் மற்றும் அதன் சமூகப் பொறுப்புக்களின் பிரகாரம் என பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துவதோடு, கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களின் மற்றும் அமைப்புக்களில் உள்ள ஏனையவர்களின் சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரத்தை பாதுகாத்தலை விருத்தி செய்கின்றது. உரிய செயன்முறைகள் நிறுவன சமூகப் பொறுப்புக்கள் அறிக்கையில் 37 இருந்து 44 வரை விவரமாகக் காட்டப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் உறுதியான உள்ளக இணக்கப்பாட்டு செயன்முறையிலான கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை வழங்குவதோடு, இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்று இலங்கை கணக்கியல் தரம் (LKAS மற்றும் SLFRS) மற்றும் ஏனைய சட்ட ரீதியான விதிமுறைகளின் வழிமுறைகளுக்கு இணக்கப்பாட்டைத் தயார் செய்துள்ளது.

இருப்பு

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மற்றும் பணப் பாய்ச்சல் நிலைமை சரியாக மீளாய்வு செய்வதன் பின்னர் பணிப்பாளர்களினால் நிதிக் கூற்று தயாரிக்கும் போது “Going Concern” அடிப்படையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன, கூட்டுத்தாபனத்தின் எதிர் காலத்திற்காக அதன் செயற்பாட்டினை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு போதுமான வளங்கள் உள்ளன என பணிப்பாளர் சபையின் நம்பிக்கையாகும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் - 2021

திருமதி பியன்கா. என் கமகே	-	தலைவர்
திரு. எச்.கே. எம்.ஜே. எச். குமாரசிங்ஹ	-	உறுப்பினர்
திரு. கபில பிரசன்ன	-	உறுப்பினர்

2021 ஆம் ஆண்டின் போது கவனம் செலுத்தப்பட்ட பிரிவு



குழுவின் நோக்கங்கள்

நிதி அறிக்கையிடல் செயற்பாட்டு மீளாய்வு செய்வதினூடாக பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட நிதிக் கூற்றுக்களின் சரியானதெனவும் சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்படுகின்ற செயற்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு, உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு மற்றும் சகல தரப்பினர்களதும் தேவைப்பாடுகளைப் பாதுகாக்கும் நோக்கில் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணக்காய்வு முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

பிரதான பொறுப்புக்கள்

- நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டவைகளை போதியளவில் உள்ளதாக உறுதிப்படுத்தல்.

- கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தலை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினதும் இடர் முகாமைத்துவத்தினதும் செயற்பாடுகள் போதியளவிலும் வினைத்திறனாகவும் கண்காணிக்கப்படல் மற்றும் மீளாய்வு செய்தல்

- கணக்காய்வுக் குழு அங்கீகரிக்கப்பட்ட மேவுகைத் திட்டத்தை செயற்படுத்துதல் உட்பட உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

- வெளிக் கணக்காய்வாளரின் சுயாதீனம் மற்றும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்

- வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வில் எழுந்த கண்டுபிடிப்புக்களை கருத்திற் கொள்ளல்.

- திரட்டிய அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் இடைக்கால அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கு சபைக்கு பரிந்துரைத்தல்

2021 ஆம் ஆண்டின் பேஓது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கணக்காய்வுக்குழு 2021 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியது.

01. நிதி அறிக்கை

பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்வதற்கு முன், குழு இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து முகாமைத்துவத்துடன் கலந்துரையாடியது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தகவல் அமைப்புக்களில் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் செயல்திறன் மற்றும் ஆபத்து குறித்து குழுவினால் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக சாத்தியமான நிதித் தாக்கத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, வணிகத்தின் நம்பகத் தன்மையை குழு தவறாமல் மதிப்பீடு செய்தது. மேலும் ஆண்டு முழுவதும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் நிதியவழங்கல் மீளாய்வு செய்யப்படுகின்றது.

02. இணக்கப்பாடு

ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட இணக்கப்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக முகாமையினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான வரி இணக்கக் கூற்று உட்பட ஒழுங்குபடுத்தல் கூற்று கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.

03. உள்ளகக் கணக்காய்வு ஆபத்து மற்றும் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தைப் பாதிக்கும் அனைத்து வகையான குறிப்பிடத்தக்க இடர்களையும் கண்டறிவதோடு குறைப்பதற்கு பயனுள்ள தந்திரோபாய உத்திகள் செயற்படுவதாக முகாமைத்துவத்திடம் இருந்து தேவையான உத்தரவாதங்களைப் பெறுவதில் குழு தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டில் ஆபத்துக்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்களுக்காக கூட்டுத்தாபனம் பின்பற்றும் பிரதான ஓர் இடர் முகாமைத்துவ செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்துடன் குழு கலந்துரையாடலை மேற்கொண்டது.

கூட்டுத்தாபனத்தினுள் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமானவை எனவும் செயலாற்றல் பற்றி குழு தொடர்ந்து மதிப்பாய்வு செய்தது. நடத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வில் புதுப்பித்தல்களும் இதில் அடங்கும். மேலும் இச்செயன்முறையானது கூட்டுத்தாபனத்தின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குவதும் பற்றிய புதுப்பித்தலையும் உள்ளடக்கியது.

கூட்டுத்தாபனத்திற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை உரிய கால இடைவெளிக்குள் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதோடு, தொழிற்பாட்டுச் சூழலுக்கும் வணிகத் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றங்களைச் செய்தது.

04. வெளிவாரிக் கணக்காய்வு

குழுவானது வெளிவாரிக் கணக்காய்வாளரைத் தொடர்ந்து சந்தித்து அவர்களின் சுதந்திரம் விடயப்பரப்பு மற்றும் செயற்பாடுகளை அவதானித்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரிக் கணக்காய்வாளருடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் கணக்காய்வைத் திட்டமிடல் மற்றும் விடயப் பரப்பினைத் திட்டமிடும் கட்டத்தின் போது கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களை அங்கீகரிக்கும் முன்னர் கணக்காய்வினைப் பூர்த்தி செய்தல் தொடர்பாக கணக்காய்வு அறிக்கை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மேம்படுத்த வேண்டிய பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் பிரகாரம் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்த வேண்டிய ஏனைய விடயங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் ஏதேனும் குறிப்பிட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காகவும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வுக் குழுவினால் உயர் முகாமைத்துவ தகவலைக் கருத்தில் எடுத்துக் கொண்டு, வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் செயலாற்றலை மீளாய்வு செய்ததுடன் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் முகாமைத்துவத்துடனும் கலந்துரையாடப்பட்டன.

பீ. என் கமகே தலைவர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

இடர் முகாமைத்துவம்

நிலைபேறான வளர்ச்சிக்காக நிறுவன நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் நிரந்தர செயன் முன்னேற்றமொன்றை அடைந்து கொள்வதற்காக வியாபார மற்றும் நிதி ஆபத்து முகாமைத்துவம் முக்கியமான செயற்பாடொன்றாக உள்ளது. ஆபத்தை முழுமையாக இல்லாமல் ஆக்குவதற்கு முடியாத சாதகமொன்றாக உள்ளதுடன் தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் தந்திரோபாயங்களைப் பின்பற்றி ஆபத்தைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் உறுதியாக நிற்கின்றது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காகப் பல்வேறு வகைகளில் தந்திரோபாயங்கள் பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

ஆபத்தான சூழல்

கொவிட்- 19 தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டு நிதியாண்டு மிகவும் சவாலான ஆண்டாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திறனான தலைமைத்துவத்துடன் மரவளங்களை வினைத்திறனாக முகாமை செய்வதன் ஊடாக இந்த நிச்சயமற்ற நிலையைத் தவிர்த்து எமது அடிப்படை வியாபாரத்துடன் பலமாக வளர்ச்சியடையும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் பல்கைப்படுத்தலான கைத்தொழிலில் இருத்தல் மற்றும் ஆபத்து முகாமை செயற்பாட்டின் போது கூட்டுத்தாபனத்துக்குப் பலமாக இருந்ததுடன் பொருளாதார பின்னடைவுப் பின்னணியில் இருந்த போதும் நிலையான முன்னேற்றமொன்றைப் பெற்றுக் கொண்டோம்.

ஆபத்து கட்டுப்பாடு

ஆபத்து முகாமைத்துவம் தொடர்பில் பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்பாக இருப்பதுடன் ஆபத்து முகாமை தொடர்பாக மேற்பார்வை பொறுப்புள்ள கணக்காய்வு குழுவொன்றினால் இதற்கான பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஆபத்துக்களை இனங்காணுதல், மதிப்பீடு, முகாமைத்துவத்தைக் குறைத்தல் மற்றும் ஆபத்தைக் கண்காணித்தல் உட்பட உள்ளகக் கணக்காய்விற்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அபாயங்களை அறிக்கையிடுவதற்கும் ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பொறுப்பிற்குக் கட்டுப்பட்டவராக இருப்பர்.

ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு எல்லா வகையிலும் வியாபார மற்றும் நிதி ஆபத்து முறையாக இனங்காணுதல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் பொறுப்பேற்றல் என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு ஆபத்துக் கட்டுப்பாட்டு நடைமுறைக்கு வசதிகளை வழங்குவதுடன் வியாபாரத்தின் அனைத்துப் பிரிவிலும் ஆபத்து உருவாவதற்கு முன்னர் ஆபத்துக்களை இனங்காணக்கூடிய கலாசாரம் (Risk aware culture) இனை ஏற்படுத்தும் போதியளவு ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல், இனங்காணுதல் மற்றும் குறைத்தல் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1. **ஆபத்துக்களை இனங்காணுதல்**

   நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உதவும் அல்லது தவிர்க்கும் தடைகளை ஏற்படுத்தும் ஆபத்துக்களைக் கண்டுபிடித்தல், இனங்காணுதல் மற்றும் விபரப்படுத்தலே ஆபத்தை இனங்காணுதலின் நோக்கமாகும். ஆபத்தை இனங்காணும் போது வியாபாரத்துக்குரிய போதுமான சாத்தியக் கூறுகள், நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் முக்கியமாக இருப்பதுடன் நோக்கங்கள் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் தாக்கமளிக்கும் நிச்சயமற்ற தன்மையை இனங்காண்பதற்காக நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. **ஆபத்துப் பகுப்பாய்வு**

   ஆபத்துப் பகுப்பாய்வின் அடிப்படை நோக்கம் ஆபத்தின் தன்மை மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தாக்கமளிக்கும் அளவு உட்பட இலட்சணங்களை விளங்கிக் கொள்வதாக இருப்பதுடன் ஆபத்து பகுப்பாய்விற்கு, நிச்சயமற்ற நிலைமை, ஆபத்தின் பின்விளைவுகள், ஆபத்து மூலங்கள், மாதிரிகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றின் செயற்திறன் தொடர்பாக விபரமாக பகுப்பாய்வுகள் உள்ளடங்கும். தரவுகளின் பல்வேறுபட்ட தன்மை, சிக்கலான நிலைமை, பகுப்பாய்வின் நோக்கங்களின் அடிப்படையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் காணப்படும் வளங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படலாம். சந்தர்ப்பம் அல்லது நிலைமையின் அடிப்படையில் மற்றும் பாதுகாப்பின் பேரில் பகுபாய்வுத்திறன் முறைமைகள் தரமான பொருண்மையான அல்லது இதன் கலப்பு ஆகும்.

3. **ஆபத்தின் மதிப்பீடு**

   தீர்மானம் எடுக்கும் மதிப்பீட்டிற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படை நோக்கமாகக் குறிப்பிடலாம். ஆபத்துப் பகுப்பாய்வின் பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட ஆபத்து நியதிகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டுக் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆபத்து முகாமைத்துவத்திற்காக

மேலதிக நடவடிக்கைகளின் தேவைப்பாடு இனங்காணல் மதிப்பீட்டு செயற்பாட்டில் உள்ளடங்கும். அத்தீர்மானங்கள் பின்வருமாறு


- எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை
- ஆபத்துக்கான சிகிச்சை முறைகளைக் கருத்திற் கொள்ளுதல்
- அவதானத்தின் தாக்கங்களை மேலும் விளங்கிக் கொள்வதற்காக கூடுதலாகப் பகுப்பாய்வு செய்தல்
- காணப்படும் கட்டுப்பாடுகளைப் பேணிச் செல்லல்
- நோக்கங்களை மீண்டும் கருத்திற் கொள்ளல்

4. **ஆபத்துக்களுக்கான சிகிச்சை**

ஆபத்துக்களுக்கான சிகிச்சை செயற்பாட்டின் நோக்கம் ஆபத்தை தீர்வு செய்வதற்காக மாற்று வழிகளை இனங்கண்டு செயற்படுவதாகும். அது கீழே காட்டப்பட்டுள்ளவாறு புனரமைப்புச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ஆபத்துக்கான சிகிச்சைக்காக மாற்றுவழி தயாரித்தலும் தெரிவு செய்தலும்
- தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திட்டங்கள் மற்றும் செயற்படுத்தல்
- செயற்படுத்தப்பட்ட சிகிச்சை செயற்திறனை மதிப்பீடு செய்தல்
- எஞ்சிக் காணப்படும் ஆபத்தின் தாக்கம் நிறுவனத்திற்கு ஏற்றுக் கொள்ள முடியுமா எனத் தீர்மானித்தல்
- ஏற்றுக் கொள்ள முடியாதெனின் மேலும் சிகிச்சை முறைகளை செயற்படுத்தல்

ஆபத்து வெப்ப வரைபடம்



ஆபத்து வெளிப்பாடு	நோக்கங்கள்	ஆபத்தைக் குறைக்கும் தந்திரோபாயங்கள்
நிதி ஆபத்து முகாமைத்துவம்		
1 திரவ மற்றும் நிதி முகாமைத்துவம்	சந்தைவாய்ப்புக்களுக்கு வேகமாகபொறுப்பேற்றல் தெரிவிக்கும் உறுதிப்படுத்துவதற்காக உடனடி நிதியை வழங்கும் இயலுமையை உறுதிப்படுத்தல்	நீண்ட கால கடன் மூலம் சொத்துக்களுக்கு நிதி வழங்கல்
	எப்போதும்"போதியளவு" திரவத் தன்மை மட்டத்தைப் பேணிச் செல்லல்	எப்போதும் கூட்டுத்தாபனம் குறுங்கால கடன் பெறும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்
		எப்போதும் கூட்டுத்தாபனம் குறுங்கால கடன் பெறும் செலவின கட்டுப்பாட்டிற்காக நிதி அதிகாரம் பெறுமதி அடிப்படையில் பகிரப்பட்டுள்ளனவசதிகளைப் பெற்றுக் கொள்ளல்
		எகூர்கால நிதித் தேவைப்பாட்டிற்காக சமர்ப்பிக்கக் கூடிய புத்தகப் பெறுமதியை விட கருத்திற் கொள்ளக் கூடிய சந்தை பெறுமதியுடனான காணி மற்றும் கட்டிடங்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றன.
		வெவ்வெறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதித் தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளல்
2 வட்டி வீத ஆபத்து	உறுதியற்ற வட்டி வீதத்தின் பாதகமான தாக்கத்தைக் குறைத்தல்	கூட்டுத்தாபனத்தின் முதலீட்டுக்காக முடியுமான வரை முடியுமான அளவு வட்டி வீதத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கியுடன் கலந்துரையாடல்
	கடன் எடுத்தல் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதை உறுதிப்படுத்துதல்	உயர் கிரயத்தைக் குறைக்கக் கூடிய வகையில் உள்நாட்டு வட்டி வீதங்களில் பாதகமான தளம்பல்களைத் தவிர்ப்பதற்காக வழங்குனர்களிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் கலந்துரையாடல்
	பங்கின் மீதான இலாபத்தை உச்சப்படுத்தல்	குறைந்த Gearing வீதத்தை பேணிச் செல்ல மற்றும் விளைவுள்ள பயனுள்ள மூலதன முகாமைத்துவம்

வியாபார ஆபத்து முகாமைத்துவம்		
3. கொவிட் 19 ஆபத்து	உத்தியோகத்தர்களின் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்	சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளை கட்டாயம் பின்பற்றுதல்
	தொடர்ச்சியாக வியாபாரத் தொழிற்பாடுகளை நடாத்திச் செல்வதை உறுதிப்படுத்துதல்	வைரஸ் தாக்கம் தொடர்பாக தொழிலாளர்களுக்குத் தேவையன அறிவினை வழங்குதல்
		எழுமாற்று அடிப்படையில் PCR பரிசோதனை செய்தல்
		மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருள் தொடர்பாக பாதுகாப்பு இருப்பினைப் பேணுதல்
4. கடன் ஆபத்து	கடன்பட்டோர் கடன் தவிர்ப்பினை அண்மித்த ஆபத்தைக் குறைத்தல்	கடன் கொள்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் குறைத்தல்
		அனைத்து பிரதான வாடிக்கையாளர்களுக்கும் வங்கி பிணை பொறுப்பு மற்றும் வைப்புகளை மற்றும் பிணைகளைப் பெற்றுக் கொள்ளல்
		கடன் வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் கடன் வழங்கும் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கூடுதலான மதிப்பீடு செய்யும் செயற்பாட்டை பின்பற்றுதல்
		கடன்பட்டோரின் மீதிகளை அண்மித்து மேற்பார்வை செய்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அச்செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த வகையில் செயற்படுவதை உறுதிப்படுத்தல்
5. சொத்துக்கள் ஆபத்து	தீயினால், திருட்டினால் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதடைவதால் ஆபத்துக்களைக் குறைத்தல்	சகல தொட்டுணரக் கூடிய சொத்துக்களுக்கும் விரிவான காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
		கட்டாய தவிர்ப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்
		தீயணைப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தல்
6. உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஆபத்துக்கள்	கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றைப் பேணுதல்	முறைமைக் கணக்காய்வு, இருப்பு மற்றும் பணத்தை கணக்கிடல் உட்பட சகல கணக்காய்வுப் பிரிவினால் செயற்படும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்றைச் செயற்படுத்தல்.
		கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலின் இலக்குகளுக்கு இணங்குவதாக உறுதிப்படுத்துவதற்காக பாதீட்டு செயற்பாட்டிலும் பாதீட்டு கட்டுப்பாட்டு செயன்முறையொன்றைச் செயற்படுத்தல்.
7. நன்மதிப்பும் தொடர்புடைய ஆபத்தும்	நன்மதிப்பிற்குத் தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதைத் தவிர்த்தல்	உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியான பயிற்சி, தர முகாமைத்துவம் மற்றும் சான்றுறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்
	எமது செயற்பாட்டுக்குப் புறம்பாக நன்மதிப்பு தொடர்பான நெருக்கடியொன்று ஏற்பட்டால் அதன் தாக்கத்தைக் குறைத்தல்	அவ்வப்போது உள்ளக மற்றும் வெளிவாரி தரப் பரிசோதனை மேற்கொள்ளல்
		உற்பத்தி வசதிகளுக்காக தொடர்ச்சியான முதலீட்டு மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல்
		வெளிவாரி தரக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளல்
		தரப்படுத்தப்பட்ட உற்பத்தி செயற்பாடுகள்

8. மனித மூலதனமும் தொழிலாளர் ஆபத்தும்	தடையின்றி தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாட்டை உறுதிப்படுத்தல்	ஊக்குவிப்பு படியாகவும் நலன்புரி செயற்பாடுகள் மூலமும் ஊழியர் நலன்களை விரிவுபடுத்தல்
	ஒரு மானிட எஜமானாக என எம்மை ஈர்த்தல், ஊக்கம், வெற்றிகரமாக செயற்படுகிறது. அபிவிருத்தியைத் தக்க வைத்தல் மற்றும் தரமான ஊழிய மூலதனத்தை ஈர்ப்பது	ஊழியர் ஆட்சேர்ப்பு, செயலாற்றல் மதிப்பீடு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான மனிதவளப் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்தல் செயலாற்றல் அடிப்படையிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணுதல்
		செயலாற்றல் பேரிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணிச் செல்லுதல்
9. தொழில்நுட்ப ஆபத்து	தற்போதைய தொழிநுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செயற்படல் காலாவதியானவைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்	புதிய தொழிநுட்பம் மற்றும் தானியங்கி செயற்பாட்டுக்காக தொடர்ச்சியான முதலீடு
		ஆண்டு பூராகவும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முதலீடு செய்தல்
10. சந்தை போட்டி ஆபத்து	எமது சந்தைப் பங்கை உச்சப்படுத்தல்	உயர் தரமாக உற்பத்தியை சந்தைக்கு வழங்குதல்
	அடிப்படை உற்பத்திகளின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்	கூறு விலைகளில் போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி செயற்திறன் மற்றும் வினைதிறனை அதிகரித்தல்
		தேவைப்பாடுகளை இனங்காண்பதற்காக சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
		சந்தை பிரசித்தப்படுத்தல் மற்றும் இலக்கு விற்பனை மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல்
		காட்சிக் கூடங்களில் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல்
11. சுற்றாடல், அரசியல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆபத்து	எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிச் சூழலில் ஏற்படக் கூடிய எதிர்த்தாக்கங்களைக் குறைத்தல்	ஊழிய அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்குதல் மற்றும் இணங்குதலை உறுதிப்படுத்துதல்
	ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குதல்	சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறை நிறுவனங்களின் தேவைப்பாட்டுடன் இணங்கிச் செல்லல்

நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு

ஒரு பொறுப்புள்ள அரசாங்க நிறுவனமாக, அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரதும் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைத்திரு தன்மையும் எங்களது நிலைத்திரு தன்மையும் அத்தியாவசியமான காரணி என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கிணங்க மர வியாபாரத்தை மேலும் பொறுப்புடனும் நிலைபேறானதாகவும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் புதிய தந்திரோபாயங்களை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.



சுற்றாடல் தொடர்பில் எமது அர்ப்பணிப்பு

காடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஓர் அரச நிறுவனம் என்ற வகையில், கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு எப்போதும் முயற்சி செய்கிறோம். எங்கள் செயற்பாடு மற்றும் அபிவிருத்தியுடன் இணைந்ததாக சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நாங்கள் எல்லா முயற்சிகளையும் செய்கிறோம்.

இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, அரச மரக் கூட்டுத்தாபனம் 2021 நிதியாண்டில் பின்வரும் திட்டங்களை செயற்படுத்தியிருக்கின்றது.

அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்திச் செல்லப்படும் நாற்று மேடைகள் மூலம் இலவசமாகக் கன்றுகளைப் பகிர்ந்தளித்தல்.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 14 பிராந்தியங்களின் மூலம் 26 நாற்றுமேடைகளைப் பராமரித்து செல்வதுடன் அவற்றின் பொருள் தரத்திலான பெறுமானத்துடன் கூடிய நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நாற்றுக்கள் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு இலவசமாக வழங்குதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.



கித்துள்கல நாற்றுமேடை



மிதலன நாற்றுமேடை

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கித்துல்கல மற்றும் மிதலன நாற்றுமேடையின் உற்பத்திகள்

2021 ஆம் ஆண்டிற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்றுமேடைகளில் சுமார் 120,000 கன்றுகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, 31,268 கன்றுகள் மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.



இரத்தினபுரி பிராந்தியத்தின பலாங்கொடை, கொடகும்புர பிரதேசத்தின் மரநடுகை நிகழ்ச்சித் திட்டம்



கொழும்பு பிராந்தியத்தின் செம்கை பாதுக்கை பிரதேசத்தின் மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் (கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம் மற்றும் Rotract club உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது)

ஊழியர் தொடர்பில் எமது அர்ப்பணிப்பு

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்கு துறையினுள் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் போதும் பதவி வகிக்கும் போதும் தேவையான அறிவு மற்றும் திறனை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டு ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் மூலம் ஊழியர்கள் பல்வேறு பாடநெறிகளுக்காக ஈடுபடுத்தப்படுவர்.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தெமுல்ல மர தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி மற்றும் தமது துறையில் அறிவினை மேம்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை, வெவ்வேறு பயிற்சிகளுக்காக தொடர்புபடுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், மேலும் தேவையான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளி நிறுவனங்களில் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காகவும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அதன்படி 2021 ஆம் ஆண்டிற்காக கல்தெமுல்ல மர தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்தின் மூலமும் ஏனைய வெளி நிறுவனங்களின் வளப் பங்களிப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக ஊழியர்கள் கீழே காட்டப்படுகின்றது.

நடாத்தப்பட்ட நிறுவனம்	பாடநெறிகள்/செயலமர்வுகள்	பாடநெறிகள் / செயலமர்வுகளின் எண்ணிக்கை	தொடர்புபடுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை
கல்தெமுல்ல மர தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்துடன் இணைந்ததாக	வனத்தொகை மற்றும் GPS தொழிநுட்பம்	05	182
	காட்சியறை அமைப்பு	01	25
	நிதிப் பிரமாணங்கள்	01	70
	அரிமர கிழிக்கும் ஆலைகள் வாள் தயாரித்தல்	01	32
	கொள்முதல் செய்முறை	01	57
	வெளிவாரி ஆலோசகரொருவரைத் தேர்ந்தெடுத்தல்	01	47
	கடன் விற்பனை அமைப்பு	01	25
	இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்	02	105

(வெளி நிறுவனங்களின் மூலம்) SDFL, SLSI, NIBM, CETRAC பிராக் திட்டமிடல், பல்கலைக்கழகங்கள் என்பன	மனித வள முகாமைத்துவம்	52	137
	சந்தைப்படுத்தல்		
	நிதி நடவடிக்கைகள்		
	பெறுகை செயற்பாடு		
	பொரொய்லர் பயிற்சி		
	ஒழுக்காற்று நடவடிக்கை		
	விருந்தோம்பல்		
	குழுச் செயற்பாடு		
	முரண்பாட்டு முகாமைத்துவம்		
	உள்ளகக் கணக்காய்வு		
	போக்குவரத்து முகாமைத்துவம்		
	ஆங்கிலம்		
	வன விஞ்ஞானம் மற்றும் ஏனைய முதுமாணிப் பட்டம்		
வனவியல் கல்லூரி பயிற்சிகள்	டிப்ளோமா பாடநெறி	01	03
	சான்றிதழ் பாடநெறி	01	07
பயிற்சிக்காகத் தொடர்புபடுத்தப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை		**690**	

2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை - 67
மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை - 690
பயிற்சிக்காக செலவழிக்கப்பட்டமொத்த நிதி - ரூ 3,045,123/-

இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு, சீனாவின் NAFGA (National Academy of Forestry and Grassland Administration) நிறுவனத்துடன் இணைந்து அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு நிகழ்நிலை முறையில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்நிகழ்ச்சிகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஆகும்

.

நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை
NAFGA (National Academy of Forestry and Grassland Administration)	Seminar on Forest Law Enforcement and Governance for Officials from Developing Countries	01	03
	Seminar on the Implementation of United Nations Forest Instrument (UNFI) and Sustainable Forest Management for Developing Countries	01	10
	Seminar on Natural Protected Areas Management and Biodiversity Conservation for the Belt and Road Initiative Countries	01	06
	Seminar on Climate Change and Sustainable Development for the Belt Road Initiatives	01	17
Total		**04**	**36**



நிதிப் பிரமாணங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்



அரிமர கிழிக்கும் ஆலைகள் மற்றும்
வாள் தயாரித்தல் பற்றியநிகழ்ச்சித்திட்டம்



வனத்தொகை மற்றும்
GPS தொழிநுட்பம் பற்றிய செயலமர்வு

மேலும் தொழிற்சாலைக்குள்ளும் வேலைத்தளம் உட்பட சேவை புரியும் இடங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஊழியர்களை அறிவூட்டுவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடாத்தப்படுவதோடு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் தரங்களை தக்க வைத்துக் கொள்வதற்கும் ஊழியர்கள் ஊக்கமளிக்கப்படுகின்றனர். வெளிப்படையாக தொழில் வழங்குனரான நாம்,

ஊழியர்களின் மருத்துவப் பட்டியலுக்கு கொடுப்பனவு செய்வதற்கும் திடீர் விபத்து மூலம் ஏற்படும் நட்டங்களை சீர்செய்வதற்கும் தேவையான காப்புறுதி மேவுகையை வழங்கியுள்ளோம்.

கொவிட்- 19 வைரஸ் நாடளாவிய ரீதியில் பரவும் முறை மற்றும் பரவுவதைத் தடுக்கும் முறை பற்றி ஊழியர்களை அறிவூட்டுவதன் மூலம் ஊழியர்களைப் பாதுகாப்பதற்கு கூட்டுத்தாபனம் கடமைப்பட்டுள்ளது. மேலும் வைரஸ் பற்றிய தகவல்கள், எவ்வாறு ஆபத்தைக் குறைப்பது, வைரஸின் நோய் அறிகுறிகள், பொதுவான சிகிச்சை மற்றும் பிற முக்கிய தகவல்கள் ஊழியர்களிடையே பிரச்சாரப்படுத்தப்பட்டன. இந்த கொவிட்- 19 கட்டுப்பாட்டு உத்திகளுடன் முகக்கவசம் மற்றும் கிருமி நீக்கத் திரவங்கள் அனைத்து ஊரியர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

சமூக அபிவிருத்திக்காக எமது அர்ப்பணிப்பு

சமூகமானது கூட்டுத்தாபனத்தின் பிரதான பிரிவினராவதுடன், மரக் கைத்தொழிலின் வெற்றியின் இருப்புக்கும் சமூகத்தின் பங்களிப்பு அவசியமாகும். நீண்டகால உற்பத்திப் பிரிவிற்குரிய மர உற்பத்தியாளர் என்ற வகையில் மொத்தத்தில் சமூகத்திற்கு இலாபமடையும் வகையில், வாடிக்கையாளர் திருப்தி தொடர்பாக சாதாரண வகையில் உயர் தரமுடைய உற்பத்திகளை வழங்குவது எமது பொறுப்பாகும்.

2021 வருடத்துக்கு மேற்கொள்ளப்பட்ட மரம் பற்றிய ஆராய்ச்சிகள்

ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவினரால் 2021 ஆம் ஆண்டில் மர விஞ்ஞானம், வன விஞ்ஞானம், சந்தைப்படுத்தல், சூழல் விஞ்ஞானம் பற்றிய துறைகளில் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இப்பெருமளவு ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்தல்களும் பெறுபெறுகளும் ஆய்வுப் பத்திரங்களின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, சில ஆராய்ச்சிகளைப் பிரசுரிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2021 ஆண்டிற்குள் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

Journal papers

- Muthumala, C. K., Sudhira De Silva, P.L. A. G. Alwis, and K. K. I. U. Arunakumara 2021. Failure Modes and Compression Strength of Seven Finger-Jointed Wood Species from Sri Lanka, J Fail. Anal. and Preven. https://doi.org/10.1007/s11668-021-01274-9 springer journal
- Muthumala, C.K., De Silva, S., Alwis, P.L.A.G. and Arunakumara, K.K.I.U. 2021. Identification of the best finger joint configuration for Sri Lankan wood species based on the flexural strength. J Indian Acad Wood Sci (2021). https://doi.org/10.1007/s13196-021-00284-2. Springer journal
- Muthumala, C.K., Arunakumara, K.K.I.U., De Silva, Sudhira. and Alwis, P.L.A.G. 2021. Assessment of finger-joint efficiencies in Sri Lankan timber species, The Sri Lanka Forester, Forest Department, Sri Lanka. Vol. 40, 2021 pp.57 – 70.
- Muthumala, C.K., Arunakumara, K.K.I.U., De Silva, Sudhira. and Alwis, P.L.A.G. 2021. Investigation of the strength parameters and physical properties of timber species in Sri Lanka, The Sri Lanka Forester, Forest Department, Sri Lanka. Vol. 40, 2021 pp.57 – 70.
- Muthumala, C.K., De Silva Sudhira., Arunakumara K.K.I.U. and Alwis P.L.A.G. 2021. Evaluation of the failure modes of the finger-jointed timber species for utilization of waste timber. International Conference On Innovations in Energy Engineering & Cleaner Production, 2021, San Francisco, CA – USA.
- W.V. Tharindu Amarasinghe, Toru Terada, and Hirokazu Yamamoto (2021). Enhancing the carbon sequestration of high-elevation Eucalyptus plantations in Sri Lanka for future carbon market activities. Journal of Forest Research, 26(1):1-7. DOI: 10.1080/13416979.2021.1927501

Abstract papers in symposia and conferences

- Muthumala C.K., 2021. Identification of Jack *(Artocarpus heterophyllus)* and Bedidel *(Artocarpus nobilis)* timber species using anatomical features, International Symposium on Agriculture and Environment 2021 University of Ruhuna, Sri Lanka, p.84.
- Muthumala, C.K., De Silva Sudhira., Arunakumara K.K.I.U. and Alwis P.L.A.G. 2021. Assessment of the mix timber combination effect of finger–jointed timber species using flexural and tensile strength, International Conference on Structural Engineering and Construction Management, Kandy, Sri Lanka.
- Amarasinghe W.V.T.D. and Muthumala C.K. (2021). Assessment of the Wastage in the Sawmilling Industry of Sri Lanka, a Case Study of STC Sawmills. International Conference on Environmental Good Governance, Colombo, Sri Lanka
- Balasooriya L.S., Amarasinghe W.V.T.D., Weerakkody J. and Muthumala C.K. (2021). A New Bucking Approach to Improve Teak *(Tectona grandis)* Grading: A Case Study In Kurunegala District. Open University Research Sessions 2021 (OURS 2020).
- Jinadari W.M., Weerakkody J, Amarasinghe W.V.T.D. and Muthumala C.K. (2021). Above Ground Carbon Stock Estimation of Intermediate Zone Teak *(Tectona grandis)* Grown in Sri Lanka. Open University Research Sessions 2021 (OURS 2020).
- Lecture Notes in Civil Engineering

- Muthumala, C.K., Amarasinghe W.V.T.D. and Mudalige T.S. (2021). Assessment of Wood Properties in Lesser-Known *Shorea* spp. in Sri Lanka. ICSBE 2020 - Lecture Notes in Civil Engineering Chapter: Sustainable Material and Manufacturing Publisher: Springer Nature Singapore Pte Ltd. DOI: 10.1007/978-981-16-4412-2_36

சஞ்சிகைகள்

- சீ.கே. முதுமால (2021) அதிவேகத்தை குறைத்த பணுகரந்த தாவரம். இயற்கை. சூழல் வெளியீடு. முதலாம் வலயம் XXX ஆவது பகுதி, சுற்றாடல் அமைச்சு

பைனஸ் மரப் பாதுகாப்பு மற்றும் நீண்டகால இருப்பை அதிகரிப்பதற்காக புதிய ஆய்வுத் தொடரொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அவை மேலும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.



பைனஸ் மரம் தோய்க்கும் முறைகள் போரோன் பாதுகாப்பு செய்யும் போது வெவ்வேறு கால இடைவெளிகளில் தோய்த்து வைக்கும் தாக்கத்தை ஆய்வு செய்தல்



பைனஸ் மரம் தோய்க்கும் முறைகள் போரோன் பாதுகாப்பு செய்யும் போது வெவ்வேறு செறிவுகளில் தோய்த்து வைக்கும் தாக்கத்தை ஆய்வு செய்தல்

இவ்வாய்வுகளின் பெறுபேறுகள் மர மற்றும் வன விஞ்ஞான துறைகளில் கற்கும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மிக முக்கியமாவதோடு அக்கண்டுபிடித்தல்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைச் செயன்முறைக்காகப் பயன்படுத்தப்படும்.

பைனஸ் மரப் பயன்பாடு பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்

அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின்படி இலங்கையில் பைனஸ் மரங்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இக்காரணத்தினால் குறுகிய காலத்திற்குள் பாரிய பைனஸ் மர அறுவடையொன்று உள்நாட்டு சந்தைக்கு விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் உள்நாட்டு மரங்களை சந்தைக்குள் பைனஸ் மரங்களின் குணாதிசய பாவனைகள் பற்றிய போதியளவு அறிவொன்று இல்லை என அவதானிக்கப்பட்டுள்ளதோடு, இம்மரம் பற்றிய தவறான எண்ணங்களும் காணப்படுகின்றன. இக்காரணத்தினால் நாட்டு மக்களும் மரக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் பைனஸ் மரப் பாவனை பற்றிய சரியான அறிவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக விசேட அறிவூட்டும் பத்திரமொன்றும் தயாரித்து அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.





வெளிப்புற வெளித் தரப்பினருக்கு தொழிநுட்ப ஒத்துழைப்பை வழங்குதல்

அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கும் வெளி நிறுவனங்களுக்கும் தேவையான மரம் மற்றும் வன விஞ்ஞானம் பற்றிய தொழிநுட்ப ஒத்துழைப்பை வழங்குவது மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு அந்நிறுவனங்களில் மரங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகை செயன்முறைக்கு ஒத்துழைத்தல், மர பொருள் எண்ணுக்காக அளவுகளைத் தயாரித்தல், பிற ஆலோசனை வழங்குவது மேற்கொள்ளப்படுவதோடு, 2021 ஆண்டில் அவ்வொத்துழைப்பை வழங்கிய நிறுவனங்கள் கீழே காட்டப்படுகின்றது.

- அழகியல் கலை பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம்
- இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவனம் (SLITE)
- கல்வி அமைச்சு
- இலங்கை விஞ்ஞான பணியகம்

மரங்களை இனங்காணுதல் மற்றும் மர அறிக்கை பற்றிய தகவல்கள்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் மூலம் புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மரங்களின் உள்ளக இழையப் பகுதியை ஆய்வு செய்து அவற்றின் இழையத்தை கட்டமைப்பு பகுப்பாய்வு மூலம் மரத்தை இனங்காணப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது. வருடமொன்றுக்கு மரத்தை இனங்காணும் சான்றிதழ் மற்றும் பிற அறிக்கை 150-200 இடையிலான அளவொன்று அரச மற்றும் அரசு அல்லாத நிறுவனங்களுக்கு இதன் கீழ் வெளியிடப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது. மரத்தை இனங்காண்பதற்கு மேலதிகமாக மரங்களின் ஆற்றல் பண்புப் பகுப்பாய்வுக்காக MOE, Compression test, Density tests, Tension tests போன்றவையும், நீண்ட கால இருப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய Boron Test, CCB Test போன்ற ஆராய்ச்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.




இழையம் விஞ்ஞான அறிகுறிகளின்படி இனங்காணல்


மர கட்டமைப்பு அறிகுறிப் பயன்பாட்டினால் மர வகைகளை இனங்கண்டு அதன்படி 2021 வருடத்திற்கான கீழே காட்டப்பட்டுள்ள அறிக்கை வெளியிடப்பட்டுள்ளன. பாதுகாப்பு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 193 ஆகும்.

அறிக்கை	வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை
அரிமரத்தை இனங்காணல்	96
ஈரலிப்பு பரிசோதனை	30
அடர்த்தி பரிசோதனை	16
போரோன் பரிசோதனை	12
CCB பரிசோதனை	05
அரிமரங்களின் உறுதிப் பரிசோதனை	13
பிற அரிமர அறிக்கை (வெளி நிறுவனங்களுக்குச் சென்று மேற்கொள்ளப்பட்ட மற்றும் தொழிநுட்ப அறிக்கை)	21
மொத்தம்	**193**


வியாபாரப் பொழிப்பு


வருவாய் வளர்ச்சிப் போக்கு பகுப்பாய்வு







இலாப அதிகரிப்பு போக்கு பகுப்பாய்வு










உற்பத்தி வளர்ச்சிப்போக்கு பகுப்பாய்வு














மூலதனச் செலவினம் – 2021

விபரம் (ரூபா 2 மில்லியனுக்கு மேல்)	ரூபா
காணி – குருனாகல் பிராந்தியம்	32,600,472
லொக் லோடர் – அம்பாறை பிராந்தியம்	27,930,000
களஞ்சிய கொட்டகை – கண்டி பிராந்தியம்	9,371,094
Clamp carrier machine – கல்தெமுல்ல தளபாட அலகு	4,524,100
துளைக்கும் உபகரணம்- கல்தெமுல்ல தளபாட அலகு	4,060,000
துளைக்கும் உபகரணம் – பூஸ்ஸ தளபாட அலகு	4,060,000
Graffle unit – அனுராதபுர பிராந்தியம்	3,240,000
கொங்கிரீட் வீதி - அம்பாறை பிராந்தியம்	3,054,850
CCTV அமைப்பு – பிரதான அலுவலகம்	2,999,625
கொங்கிரீட் வீதி- மல்சிரிபுர டிப்போ	2,982,945
கொங்கிரீட் வீதி- கங்கானியாமுல்ல டிப்போ	2,823,208

முதலீடு	31-12-2021	31-12-2020
திறைசேறி பத்திரம்	346,843,350	-
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி	232,747,814	219,691,174
நில மீட்பு மற்றும் அபிவிருத்தி (பிரைவட்) லிமிடட்	500,000	500,000
மக்கள் வங்கி	1,828,073,777	785,754,782
இலங்கை வங்கி	2,606,347,769	1,486,003,969

தசாப்தத்தின் தகவல்கள் (முழுமையான பெறுமதிகள்)

		2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
வருடத்திற்கான முழு வருமானம்	ரூபா. '000	3,563,390	3,213,644	3,756,482	4,132,052	4,522,238	4,630,718	4,457,024	4,608,413	4,372,033	5,996,789
வருடத்திற்கான மொத்த இலாபம்	ரூபா. '000	1,546,107	1,197,518	1,453,450	1,757,115	2,045,090	2,075,950	1,964,647	1,890,812	1,745,766	2,753,682
வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னைய தேறிய இலாபம்	ரூபா. '000	801,681	382,337	427,222	768,699	659,732	966,804	672,433	512,947	569,521	1,496,156
மொத்த ஊழியர் கிரயம்	ரூபா. '000	1,065,052	1,117,036	1,254,516	1,449,749	1,789,572	1,572,775	1,553,598	1,584,418	1,640,020	1,580,855
வருடாந்த மூலதனச் செலவினங்கள்	ரூபா. '000	162,509	332,870	115,132	244,929	113,675	94,637	116,034	319,485	104,712	126,547
ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத சொத்துக்கள்	ரூபா. '000	1,479,880	1,658,535	1,654,908	1,743,580	1,732,640	1,894,597	1,978,855	2,581,165	1,966,637	2,158,971
ஆண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள்	ரூபா. '000	2,929,185	3,153,777	4,004,860	4,115,259	3,652,116	4,423,105	4,541,610	4,640,889	5,319,557	7,048,847
ஆண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள்	ரூபா. '000	804,102	1,050,258	1,591,991	1,480,966	897,087	1,234,716	1,047,668	967,481	985,365	1,791,411
ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	ரூபா. '000	409,030	384,831	484,649	424,854	499,373	852,292	812,441	714,022	836,197	659,200
வருட இறுதியில் உரிமையாண்மை	ரூபா. '000	3,195,933	3,377,223	3,583,129	3,953,019	3,988,297	4,230,694	4,660,357	5,540,551	5,464,633	6,757,207
திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு	ரூபா. '000	600,000	50,000	25,000	50,000	175,000	100,000	100,000	50,000	511,026	100,000
வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை	எண்ணிக்கை.	2,187	2,139	2,186	2,145	2,125	2,083	2,001	1,803	1,708	1,606
பிரதான செயலாற்றுகை சுட்டிகள்											
பங்குகளுக்கு மற்றும் வரிக்கு முன்னர் தேறிய இலாபம்	%	25.08	11.32	11.92	19.45	16.54	22.85	14.43	9.26	10.42	22.14
நிதி மாறுதல்களுக்கு முன்னர் தேறிய இலாபம் மற்றும் முழு சொத்துக்களுக்குமான வரி	%	18.18	7.94	7.55	13.12	12.25	15.30	10.31	7.10	7.82	16.25
நடைமுறை விகிதம்	தடவைகள்	3.64	3.00	2.52	2.78	4.07	3.58	4.33	4.80	5.40	3.93
உரிமையாண்மை:பொறுப்பு விகிதம்	தடவைகள்	0.72	0.70	0.63	0.67	0.74	0.67	0.71	0.77	0.75	0.73
சொத்துக்களின் மீதான திரும்பல்	%	3.73	3.78	3.64	6.31	0.66	3.84	6.59	12.19	8.00	16.25
மொத்த வருமான வளர்ச்சி	%	14.81	(9.81)	16.89	10.00	9.44	2.40	(3.75)	3.40	(5.13)	37.16

எனது இல. எப்டப்எல்/ஏ/எஸ்ரீசீ/ஏ/2021/01 2022 யூன் 17

தலைவர்

அரச மரக் கூட்டுத்தாபனம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைபபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07

---

i. ஆண்டின் போது நடைமுறை வேலைக் கணக்கிலிருந்து (ஊயிவையட றழசம ழை ளிசழபசநளள) ரூபா 5,561,222 ஆன நடைமுறை சொத்துக்களுக்காக மூலதனமாக்கப்பட்டிருந்த போதும் அதன் மூலம் நிதி உட்பாய்ச்சலோ அல்லது வெளிப்பாய்ச்சலோ இடம்பெறாத போதும் காசு உட்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டடிருந்தது.

ii. கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 136,086,521 ஆன ஊழியர் கடன்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 146,979,660 ஆன ஊழியர் கடன் மீள அறவிடப்பட்டிருந்தது. அது காசு உட்பாய்ச்சலாகவும் அந்தக் காசு வெளிப் பாய்ச்சலாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. முதலீட்டு வருமானங்களின் காசு உட்பாய்ச்சலாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 232,435,163 என சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதும் அப்பெறுமதியில் எஸ்கெம்ஸ் செயற்திட்டத்திலிருந்து (ளுஉயஅி ளிசழதநஉவ) 2021 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய வாடகை வருமானத்திலிருந்து காசாக கிடைக்காத ரூபா 3,624,266 ஆன வாடகை வருமானம் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டடிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு, கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இறுதி இருப்பின் கிரயத்தை விட தேறிய நிகர பெறுமதி குறைவடையும் போது அவ்வேறுபாடு செலவினமொன்றாக இலாபத்திற்கு சீராக்கம் செய்ய வேண்டிய போதிலும் மேற்படி நியமத்திற்கு முரணாக கூட்டுத்தாபனதத்தினால் வியாபார இருப்பிற்காக இருப்பு குறைவிற்காக 15 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளில் இருந்து பின்பற்றப்பட்டு வரும் அந்த தவறான கணக்கீட்டுக் கொள்கை 2021 ஆம் ஆண்டின் போது பின்பற்றப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது இருப்பு குறைவிற்காக செய்யப்பட்ட ரூபா 244,674,913 ஆன ஒதுக்கீடுகளுக்கு சீராக்கம் செய்யாமல் மீளாய்வாண்டில் நதிக்கூற்றுக்களில் இருப்பலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டடிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42(டி) பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் பொருண்மையான தவறுகளை சீராக்கும் போது முன்னைய ஆண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் உரித்துக் கணக்குஆம்ப மீதிகளை மீண்டும் வைத்தல் (சுநளவயவகைபெ) இடம்பெற வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் இருப்பு தொடர்பான தவறினை முறையாக சீராக்காமையால் கடந்த 10 ஆண்டுகளின் கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் ரூபா 182,376,560 ஆல் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) அம்பாறை தளபாட தொகுதியின் ரூபா 114,258,780 பெறுமதியான 5465 உருப்படிகளுக்குரிய பகுதியளவு பூர்ததியடைந்த இருப்புக்கள் இருப்பொன்று பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் இருதி இருப்பிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) 2021 ஆம் ஆண்டிற்குரிய குறுங்கால மற்றம் நீண்டகால முதலீடகள் மீளாய்வாண்டிற்கு பெறவேண்டிய வருமானம் ரூபா 122,967,700 ஆக இருந்த போதும் ரூபா 124,495,091 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 1,537,391 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய கடன்கொடுத்தோரரில் உள்ளடக்கப்பட்ட விற்பனை முற்பணம் ரூபா 131,176,540 ஆலும் ரூபா 103,246,849 ஆன முற்பணம் தீர்வுசெய்யப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி விற்பனை முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்காமல் உடன் விற்பனைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் விற்பனை வருமானம் மற்றம் விற்பனை முற்பணம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படிகளின் செயற்திறனான ஆயட்காலம் மீளளாய்வு செய்யப்படாமையால் முழுமையாக பெறுமானத்தேய்வ செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 796,253,922 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்களின் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மீளமைத்து சரியான முகப்பு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிவல்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 கூட்டுத்தாபனத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படாமல் இருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துவதில்லை என்பதை கருத்திற் கொள்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2021 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான அளவில் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால் சீராக்குவதற்காக நிர்வாகத் தரப்பினருக்கு அவ்விடயத்தை தெரிவிக்க வேண்டும். மேலும் சீராக்காமல் தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தால் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புறையின் பிரகாரம் என்னால் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தானம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளையும் அறிக்கைளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாக தரப்பினருடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இடையே விவசாய உற்பத்தி பிரம்பு ஏற்றுமதி போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் எதிர்பார்த்த பிரகாரம் பலகை உப பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே மரத்துடன் அண்மித்த பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத பொருட்களை ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாக இருந்த போதும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2007 முதல் 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் வரை கட்டிட வாடகை கூட்டுத்தாபனத்தினால் முறையாக அறவிடப்பட்டிருந்த போதும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கட்டிட வாடகை ரூபா 89,502,,660 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மர வழங்குனர்களுக்கு வழங்கிய முற்பணத் தொகை ரூபா 21,823,345 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,843,560 தொகை 2 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த முற்பணமாக இருந்தன. அவற்றை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல அமைச்சிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,731,821 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,661,488 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

(ஈ) இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்படும் முற்பணங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,588,632 ஆக இருந்தது. அதில் 2 ஆண்டுகளை மிகைதத மீதி ரூபா 1,953,882 ஆக இருந்தது.

(உ) அம்பாறை தளபாட காட்சியறையில் விற்பனை காசுக்கும் கடனுக்கு இடம்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் விற்பனைகளில் அறவிடுவதற்குள்ள பெறுமதி ரூபா 13,091,111 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 7,767,938 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்தது. அக்கடன் தொகையை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் 67 பதவிகளுக்குரியதாக 117 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 79 இற்காக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. பதில் கடமைக்காக அமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் 44 பேருக்கு ரூபா 4,694,492 ஆன பதில் கடமை படிகள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) 2018 ஆம் ஆண்டின் போது ரொப்ஹில் வேலைத்தளத்தில் 2172யூகலிப்டஸ் வகை மரங்களை முழுமையாக வெட்டியமை மற்றும் விற்பனையின் இடம்பெற்ற முறைகேடுகளால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6,851,081 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டமை தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொண்டு அது தொடர்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஹல்துமல்ல, பூஸ்ஸ, அம்பாறை மற்றும் 03 பொருள் தொழிற்சாலைகளில் மீளாய்வாண்டின் போது 395 கட்டளைகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் 99 கட்டளைகள் அதாவது 25 இற்குச் சமமான

அளவில் ஆண்டின் போது பூர்ததி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஹல்துமல்ல, பூஸ்ஸ, அம்பாறை காட்சியறைகளுக்கு கிடைத்திருந்த கட்டளைகள் முறையே 147, 168 மற்றும் 9 ஆக இருந்ததுடன் முறையே அதில் 135, 143 மற்றும் 81 தனியார் ஒப்பந்தக்காரர்களைக்கொண்டு நிறைவேற்றப்பட்டிருந்தன. கூட்டுத்தாபன ஊழியர்களால் கூட்டுத்தாபனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள் 36 ஆக இருந்ததுடன் காட்சியறைகளுக்கு இணைக்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு ரூபா 70,466?647 தொகை சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஐ) பௌதீக இருப்பு மெய்மையாய்வு

---

i. வருடாந்த சராசரி விற்பனை மற்றம் சந்தை விலை நிலைமையை கருத்திற் கொண்டு உற்பத்தி திட்டம் தயாரிக்கப்படாமல் ஆண்டில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 440,349,304 பெறுமதியான தளபாட இருப்பொன்று ஹல்துமல்ல, பூஸ்ஸ, அம்பாறை காட்சியறைகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 14,265,277 பெறுமதியான 464 உருப்படிகள் தவறுகளுடன் கூடிய பொருட்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய பொருட்களும் அதில் இருந்தன.

ii. 400.808 கன டெசி மீற்றர் அடங்கிய நன்கொடை மரக்குற்றிகள் 3040 அம்பறை களஞ்சிய வளவில் ஆங்காங்கே குவித்து உள்ளதாகவும் அதில் சில இருப்புக்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் குற்றிகளாக இருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஒ) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட 1967 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கட்டளைச் சட்டத்தின் மூலம் சட்ட ரீதியாக கையளிக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தாமல் வெளித்தரப்பினரால் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 511,875 பெறுமதியான அழகுசாதனப் பொருட்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கு கூட்:டுத்தாபன ஊழியர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

(ஓள) அம்பாறை தொழிற்சாலையின் ஒட்டல் பிரிவில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் வேலைகளை பூர்த்தி செய்யாத ரூபா 109,587,380 ஆன 90 உருப்படிகள் மற்றும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 36,374,180 என ரூபா 154,961,150 ஆன பொருட்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(.·.) ரூபா 8,830,974 பெறுமதியான மற்றும் 286,168 டெசி மீற்றர் கருங்காலி இருப்பொன்று கூட்டுத்தாபனத்தின் உற்பத்திசாலைகளுக்கு அல்லது தேசிய கைப்பணி மன்றத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்காமல் கூட்டுத்தாபனத்தின் மரக் களஞ்சியங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தன.

(க்) பூஸ்ஸ தளபாட பொருள் காட்சியறையில் காணப்பட்ட 08 காற்றுச்சீராக்கி இயந்திரங்களில் ரூபா 1,154,944 பெறுமதியான 07 காற்றுச்சீராக்கிகள் 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாமல் பாவனைக்கு எடுக்க முடியாத வகையில் காணப்பட்ட போதும் அவற்றை கையகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) மீளாய்வசாண்டின் இறுதி வரையில் வனம் சார் குற்றங்களாக கிடைத்த ரூபா 114,056,53 மற்றும் 1,112,166 டெசீ மீற்றர் ஆன கிழித்த மரங்கள் மற்றம் ரூபா 65,601,486 பெறுமதியான 3,586,873 டெசிமீற்றர் மரக்குற்றிகளும் களஞ்சியங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 422 ஆம் இலக்க நீதிச் சேவைகள் ஆணைக் குழவின் சுற்றறிக்கையின் ஆலொசணைகளின் பிரகாரம் நீதிமனற்த்திற்கு தெரியப்படுத்தி நீதிமன்றக் கட்டளையொன்றினைப் பெற்று இந்த மரங்களை விற்று கிடைக்கும் பணத்தை வழக்கு முடியும் வரை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு அல்லது மரங்களின் பெறுமதியை மீள் கணக்கிட்டு இருப்பு புத்தகங்களுக்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கி) அம்பாறை பிராந்திய அலுவலகத்துடன் இணைந்த மரம் அரியும் ஆலை 2021 ஆம் ஆண்டின் போது அரியப்பட்ட பலகைகளாக மாற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 27,403,069 பெறுமதியான 1,061,904 டெசி மீற்றர் அளவிலான குற்றிகளில் 679,749 கனமீற்றர் அரியப்பட்ட பலகைகள் முடிவுப்பொருளாக பெறப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பலகைகளாக மாற்றும் போது இடம்பெற்ற விரயமான பலகைகள் 542,719.17 கன டெசி மீற்றராக இருந்ததுடன் அது மொத்த மரங்களின் 51 சதவீதமாக இருந்தன.

(கீ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 82,947,618 பெறுமதியான 1,030,981 மரங்கள் ரூபா 1,030,981 கன டெசிமீற்றர் அரியப்பட்ட பலகைகள், அம்பாறை பிராந்திய அலுவலகத்துடன் இணைந்த மரக் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் ரூபா 3,951,682 பெறுமதியான 71,989 டெசிமீற்றர் இருப்பு 2019 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இருந்தது. மேலும் ரூபா 7,136,534 டெசிமீற்றர் அளவிலான 366,112 மரக் குற்றிகள் சிதைவடைந்து காணப்பட்டன. 2017 முதல் 2019 வரை வெவ்வேறு வகைகளுக்குரிய ரூபா 33,251,000 ஆன 124,928 கன டெசிமீற்றர் இருப்பினை ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மட்டக்களப்பு களஞ்சியத்தில் 2018 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 17,634,441 பெறுமதியான 570,530 கன டெசிமீற்றர் தேக்கு மரக்குற்றிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

வருடாந்தக் கணக்குகள்

இலாபம் அல்லது நட்டம் மீதான கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	2021 ரூபா	2020 ரூபா
விற்பனைப் புரள்வு	2	5,695,663,163	3,981,688,028
கழி- விற்பனைக் கிரயம்	3	(2,941,981,641)	(2,235,922,452)
செயற்பாடு மீதான மொத்த இலாபம்		**2,753,681,522**	**1,745,765,576**
ஏனைய வருமானங்கள்	6		
செயற்பாட்டு	6.3	46,897,556	187,156,251
செயற்பாடற்ற	6.1	26,284,246	11,254,590
மொத்த தேறிய வருமானம்		**2,826,863,324**	**1,944,176,417**
விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள்	4	(652,350,206)	(695,762,455)
நிர்வாகச் செலவினங்கள்	5	(903,637,745)	(868,197,159)
நிதிச் செலவினங்கள்		(2,663,074)	(2,629,259)
நிதி வருமானங்கள்	6.2	227,943,565	191,933,650
வரிக்கு முன் இலாபம்		**1,496,155,864**	**569,521,194**
வருமானத்திற்கான வரி விதிப்பு	7	(259,944,164)	(105,614,520)
திறைசேறிக்கு செலுத்திய வரி		(100,000,000)	(511,025,803)
வருடத்துக்கான இலாபம்		**1,136,211,699**	**(47,119,129)**
ஏனைய விரிவான வருமானங்கள்			
வருடத்திற்கான ஓய்வூதிய நலன் மிகை குறை	18	156,362,663	(28,798,768)
ஏனைய விபரமான வருமானங்கள்		**156,362,663**	**(28,798,768)**
வருடத்துக்கான மொத்த விபரமான வருமானங்கள்		**1,292,574,362**	**(75,917,897)**

நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு

	குறிப்பு	2021 ரூபா	2020 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள்	8	1,475,219,895	1,560,609,739
உரிமையுள்ள பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்	10	370,021	4,810,252
அருவச் சொத்துக்கள்	9	213,922	501,278
உயிரியல்சார் சொத்துக்கள்	11	7,735,659	7,735,659
திறைசேறி வைப்புக்கள்		2,966,000	2,966,000
பிணை வைப்புக்கள் - ஊழியர்		78,322,465	71,738,627
முதலீடுகள்	12.1	580,091,164	220,191,174
முற்செலுத்தப்பட்ட ஊழியர் நலன்கள்		-	78,470,806
மூலதனம் நடைமுறை வேலைகள்		14,052,217	19,613,439
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		2,158,971,343	1,966,636,973
நடைமுறைச் சொத்துக்கள்			
வியாபார இருப்புக்கள்	13	1,194,553,641	1,817,201,433
வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்	14	1,175,568,840	1,009,459,934
நிலையான வைப்புக்களிலான முதலீடு	12.2	4,434,421,546	2,271,758,751
காசும் காசுக்கு சமனானவையும்	15	244,303,348	221,136,821
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**7,048,847,375**	**5,319,556,939**
மொத்தச் சொத்துக்கள்		**9,207,818,718**	**7,286,193,911**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்			
அனுமதிக்கப்பட்ட மூலதனம்		**75,000,000**	**75,000,000**
மூலதனம் பங்களிப்புக்கள்	16	41,503,668	41,503,668
வருமான ஒதுக்கங்கள்		6,282,683,017	5,055,637,127
		6,324,186,685	5,097,140,795
ஊழியர் கடன் சூழல் நிதியம்	17	433,020,533	367,492,061
மொத்த உரிமையாண்மை		**6,757,207,218**	**5,464,632,856**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நலன் கடப்பாடு	18	508,978,707	668,235,659
பிணை வைப்புக்கள்- ஊழியர்		78,322,465	71,738,627
குத்தகைப் பொறுப்பு- செயற்பாடு		452,453	5,491,621
வட்டி பொறுப்பு கடன் மற்றும் கடன் பெறுகைகள்	22	12,720,535	17,667,732
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	7.2	58,726,137	73,062,908
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		**659,200,298**	**836,196,548**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வருமான வரிப் பொறுப்புக்கள்	19	152,984,309	84,925,974
வட்டி பொறுப்புக்கடன் மற்றும் கடன் பெறுகைகள்	22	4,947,196	4,416,258
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	20	1,633,479,696	896,022,276
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		1,791,411,202	985,364,508
மொத்தப் பொறுப்புக்கள்		2,450,611,500	1,821,561,055
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**9,207,818,718**	**7,286,193,911**

1971 இல 38 ஆம் இலக்க நிதிச் சட்டப் பிரமாணங்களின் பிரகாரம் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பானக்கூற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

பொது முகாமையாளர்

உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

பக்க இல 62 முதல் 68 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 69 முதல் 79 வரையிலான குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

அரச மரக் கூட்டுத்தாபனம்
திகதி: 03.03.2022

பணிப்பாளர்

உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பிலான கூற்று

	பங்களித்த மூலதனம்	ஊழியர் கடன் சுழலும் நிதியம்	வருவாய் ஒதுக்கங்கள்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2020 ஜனவரி 1 ஆம் திகதியில் மீதி	**41,503,668**	**353,921,541**	**4,692,018,923**	**453,106,621**	**5,540,550,753**
வருடத்துக்கான சீராக்கல்கள்			(47,119,129)		(47,119,129)
ஊழியர் கடன் வட்டி சீராக்கல்கள்		13,570,520	(13,570,520)		-
ஏனைய விபரமான வருமானங்கள்			(28,798,768)		(28,798,768)
2021 ஜனவரி 1 ஆம் திகதியில் மீதி	**41,503,668**	**367,492,061**	**4,602,530,506**	**453,106,621**	**5,464,632,856**
வருடத்திற்கான சீராக்கல்கள்		50,000,000	(50,000,000)		-
வருடத்திற்கான இலாபம்			1,136,211,699		1,136,211,699
ஊழியர் கடன் வட்டி சீராக்கல்கள்		15,528,472	(15,528,472)		-
ஏனைய விபரமான வருமானங்கள்		-	156,362,663		156,362,663
2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி	**41,503,668**	**433,020,533**	**5,829,576,396**	**453,106,621**	**6,757,207,218**

காசுப்பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது

	2021 ரூபா	2020 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் காசுப்பாய்ச்சல		
வாடிக்கையாளர்களிடமிருந்து காசுப் பெறுவனவுகள்	5,722,646,799	4,491,821,014
வழங்குனர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்திய காசு	(2,985,491,312)	(3,561,603,631)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான காசுப்பாய்ச்சல்	2,737,155,487	930,217,383
செலுத்தப்பட்ட வருமான வரி	(206,222,600)	(124,863,194)
திறைசேறிக்கு செலுத்தப்பட்ட விசேட வரி	(100,000,000)	(511,025,803)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு (உட்பாய்ச்சல்/வெளிப்பாய்ச்சல்)	2,430,932,887	294,328,385
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம்-பெறுவனவு	(126,546,711)	(104,712,062)
உயிரியல் சொத்துக்கள்	-	(266,000)
முதலீடுகள்	(2,522,562,785)	(413,360,075)
முதலீடுகளிலிருந்தான வருமானம்	232,435,163	206,027,564
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம்-விற்பனை	15,465,252	126,122
நடைமுறை வேலைகள்	5,561,221	(782,426)
தேறிய முதலீட்டிலிருந்தான காசு/ (பயன்படுத்திய) காசு	**(2,395,647,859)**	**(312,966,877)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன்களிலிருந்து பெறப்பட்டவை	(12,118,500)	(8,564,544)
தேறிய காசு நிதி நடவடிக்கைகள் மூலம்/ (நிதிப் பயன்பாடு)	**(12,118,500)**	**(8,564,544)**
காசு மற்றும் அதற்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/ குறைப்பு	**23,166,528**	**(27,203,037)**
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமான (குறிப்பு 15)	**221,136,821**	**248,339,857**
வருட இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமான (குறிப்பு 15)	**244,303,348**	**221,136,821**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

1.1.1 தாபித்தல்

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1968 ஏப்ரல் மாதம் அரச மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

1.1.2 நிதிக் கூற்றுக்களுக்காக அங்கூகாரம் கிடைத்த திகதி

2022 மார்ச் மாதம் 03 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1.1.3 ஊழியர் எண்ணிக்கை

2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 1,606 ஆகும். (2020- 1,708 ஆகும்)

1.1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது.

1.2 முன்வைத்தல் அடிப்படை

1.2.1 இணக்கம் தொடர்பான கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் (இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) ஆகியவற்றுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மற்றும் அக்காலப் பகுதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடனான கூற்றுக்களுக்கான குற்றிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.2 மதிப்பீட்டு அடிப்படை

கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மற்றும் வியாபார கடன்பட்டோர் என்பன நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளதுடன், அவற்றைத் தவிர ஏனைய பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.3 பாவனையிலுள்ள மற்றும் முன்வைத்தல் பண அலகு

நிதிக் கூற்றுக்கள் கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் பண அலகாகிய இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளது. விசேடமாகக் குறிப்பிடப்படாது விடின், அனைத்து நிதித் தகவல்களும் மிகக் கிட்டிய ரூபா பெறுமதியைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

1.2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்

சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட

எண்ணிக்கைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய மதிப்பீடுகள், தீர்மானங்கள், ஊகங்கள் ஆகியவற்றை முகாமை மேற்கொள்ளுதல் வேண்டும் என நிதிக் கூற்றுக்களை முன்வைத்தலின் போது வேண்டப்படுகின்றது. மதிப்பீடு மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியாயமானது என நம்பும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ள உண்மையான பெறுபேறானது இம்மதிப்பீடுகளை விட வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை ஊகங்கள் தொடர்ந்து செல்லல் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். திருத்தப்பட்ட கணக்காய்வு மதிப்பீடுகள் அம்மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலப்பகுதிக்கு மற்றும் அவை தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்காலப் பகுதிக்கு சீராக்கம் செய்யப்படும்.

1.2.5 அந்நியச் செலாவணி பரிமாற்றங்கள்

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

1.2.6 வரி அறவிடல்

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருமானங்கள் மற்றும் செலவினங்களின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் 2006 இன் 10 ஆம் இலக்க மற்றும் 2017 இன் 24 அம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரமாணங்கள் மற்றும் பிற்காலத்தில் திருத்தங்களுக்கும் அமைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முன்வைக்கப்பட்ட இந்நிதிக் கூற்றுக்களில் எல்லா காலப் பிரிவிற்குள்ளும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.3.1 சொத்துக்கள் மற்றும் பெறுமதி கணக்கீட்டு அடிப்படை

1.3.1.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படிகள் திரண்ட தேய்மானத்தையும் மற்றும் சேதத்துக்குள்ளான பெறுமதி இழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிக்கப்படும். (காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நியாயமான பெறுமதி அடிப்டையில்) சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு நேரடியாக ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பிரத்தியேகமான உருப்படிகளாகக் கணக்கு வைக்கப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முதலில் செலவினமாக இனங்காணப்படும்.

1.3.1.1.2 மீள் மதிப்பீடு மாதிரி

மீள் மதிப்பீடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுவதுடன், அது கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் ஆண்டிறுதியில் நியாயமான பெறுமதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கொள்வனவு பெறுமதியை விட மதிப்பீட்டுப் பெறுமதி மாறுபடாது.

மோட்டார் வாகனம் (மோட்டார் சைக்கிள் தவிர) மீள் மதிப்பீட்டின் போது அவற்றின் நியாயமான பெறுமதி மீள் மதிப்பீட்டின் பெறுமதியுடன் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்படுகின்றது. அன்றைய நாளில் காணப்படும் முழுத் தேய்மானத்தின் பெறுமதி மொத்த நியாயமான பெறுமதி மற்றும் சேதம் ஏற்படத்தும் இழப்பு சரி செய்யப்பட்டதன் பின்னர் நியாயமான பெறுமதி எனும் இரண்டினதும் வேறுபாட்டிற்கு சமமான முறையில் சரி செய்யப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறு ஒன்றாக சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏனைய நீட்டிப்பு வருமானங்களின் கீழ் இனங்காணப்பட்டதுடன், அது உரிமையாண்மையில் மறு மதிப்பீட்டு பெறுமதியுடன் கூட்டப்படும். முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த சொத்தில் மறு மதிப்பீட்டு பெறுமதி குறைவதும், மீண்டும் திருப்புவதற்குள்ள திறனின் அளவின் மேல் இந்த அதிகரித்தல் இலாபம்/நட்டத்தில் இனங்காணப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறாக சொத்துக்களில் நியாயமான மதிப்பில் குறைவொன்று நடப்பு ஆண்டில் இலாபத்தில்/நட்டத்தில் இனங்காணப்படும். இக்குறைதல், அச்சொத்துக்குரிய மறு மதிப்பீட்டுப் பெறுமதியில் காணப்படும் செலவு மீதி வேறுபாடுகளின் அடிப்படையில் ஏனைய நீட்டிப்பு வருமானமாக இனங்காணப்படும்.

மோட்டார் வாகன சொத்தை அடையாளம் காணும் போது அது தொடர்பான மீள் மதிப்பீட்டுப் பெறுமதி நேரடியாக நிறுத்தி வைத்த வருமானத்துக்கு மாற்றப்படும்.

1.3.1.1.3 சொத்துக்கள் விற்பனை மீதான இலாபங்கள்/நட்டங்கள்

சொத்துக்கள் விற்பனை மீதான மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் (தேறிய விற்பனையின் போது பெறுவனவு சொத்துக்களின் முகப்பு பெறுமதி வித்தியாசமாகக் கணக்கிடப்பட்ட) சொத்துக்கள் விற்பனை செய்யும் ஆண்டில் வருமானக் கூற்றுக்களில் ஏனைய வருமானங்கள்/செலவினங்களின் கீழ் காண்பிக்கப்படும்.

1.3.1.1.4 பின்தொடரும் கிரயங்கள்

நிலையான தன்மையுடைய வியாபாரமொன்றை நடத்திச் செல்வதற்கு அல்லது வியாபாரத்தின் இயலளவினை அதிகரிப்பதற்காக செலவாகும் பிற்போடப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாக கருதப்படுவதுடன் அவ்வாறான செலவினங்கள் முன்கொண்டு வரப்படும் பெறுமதியிலிருந்து இனங்காணப்படும். அவ்வாறே ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் அவ்வப்போதான பராமரித்தல் செலவுகள் வருமானம் உழைப்பதற்கு ஏற்பட்ட செலவாக இனங்காணப்படும்.

1.3.1.1.5 அகற்றுதல்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை அகற்றுகையில் அல்லது அதன் பாவனையில் எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது அவற்றை முன்கொண்டு வருவது நிறுத்தப்படும். இவ்வாறு சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கம் செய்யப்படுவதுடன் இலாபம் வருமானமொன்றாக கருதப்பட மாட்டாது.

1.3.1.1.6 பெறுமானத் தேய்வு

